# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 02 செவ்வாய்க்கிழமை (17-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:202


## புலிகளின் சுழிபுரம் முகாம் திடீரென நேற்று படையினரால் சுற்றிவளைப்பு

### கண்காணிப்புக் குழு உறுப்பினர் வந்த பின் சோதனை

யாழ்ப்பாணம்,ஜூன்17

குடாநாட்டில் அரசியல் பணிக்காக வந்துள்ள விடுதலைப் புலிகள் தங்கியிருந்த சுழிபுரம் முகாம் நேற்றுக் காலை 5.30 மணிக்குப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

முப்பதுக்கு மேற்பட்ட 'பீல்பைக்'குகளில் வந்த 60இற்கு மேற்பட்ட படையினர் புலிகளின் முகாமை திடீரெனச் சுற்றிவளைத்தனர்.

அந்த முகாமில் சுற்றுமதில் கதவைத் திறந்த படையினர் வானை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். முகாம் அமைந்திருந்த வீட்டின் முன் 'ஹா'ட்டில்' துப்பாக்கிச் சன்னம் தாக்கியதையடுத்து, அந்த முகாமில் இருந்த பெண் போராளிகள் கதவைத் திறந்தனர்.

முகாமில் சோதனை நடத்தப் போவதாகப் படையினர் அவர்களிடம் தெரிவித்தனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரியுடன் வந்தால் மட்டுமே

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யுத்தம் மூளும் என யாரும் அஞ்சத் தேவையில்லை

### புலிகள் உறுதி கூறியிருக்கிறார்கள் என்கிறார் பீரிஸ்

கொழும்பு,ஜூன்17

புலிகள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள். இதுகுறித்து அவர்கள் உறுதிபட ஏற்கனவே தெரிவித்துவிட்டனர்.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

மீண்டும் நாட்டில் யுத்தம் மூளும் என அஞ்சத்தேவையில்லை என்றும் அமைச்சர் சொன்னார்.

மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் வடக்கு - கிழக்கில் கொலை செய்யப்படுவது குறித்து செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது அமைச்சர் பீரிஸ், வடக்கு - கிழக்கில் இடம்பெறும் கொலைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதிக்கா. இக்கொலைகள் குறித்து நாட்டில் நடைமுறையிலுள்ள குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### உதவும் நாடுகள் வழங்கும் நிதியைப் பயன்படுத்துவதற்கு

# வடக்கு - கிழக்குக்கு விசேடமாக ஆணையாளர் நியமிக்க முயற்சி!

## தனது யோசனைகள் குறித்து அரசு புலிகளுடன் ஆலோசிக்கத் திட்டம்

கொழும்பு,ஜூன்17

**உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட நிதியை உடனடியாக பயன்படுத்தத்தக்க வகையில் வடக்கு - கிழக்குக்கு ஒன்று அல்லது இரண்டு விசேட ஆணையாளர்களை நியமிப்பதற்கு அரசு ஆலோசித்து வருகிறது. இது தொடர்பாக புலிகளின் ஆலோசனையும் பெற அரசு தீர்மானித்திருக்கின்றது.**

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிக்கும் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டில் அவர் தகவல் தருகையில் கூறியதாவது: -

ஆணையாளர்கள் நியமனத்துக்கு மேலதிகமாக மாவட்டங்கள் தோறும் அபிவிருத்திக் குழுக்களும் நியமிக்கப்படும்.

இத்திட்டம் குறித்து புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்தவும் அரசாங்கம் தயாராகவுள்ளது. கடிதத் தொடர்புகள் வெறும் காலதாமதத்தையே ஏற்படுத்தும். டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு நிதி வழங்கிய நாடுகளின் பிரதிநிதிகள் இவ்வருட இறுதியில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் அடுத்த வாரம் லண்டனுக்கு விஜயம்

கொழும்பு,ஜூன்17

பிரிட்டிஷ் அரசின் அழைப்பையேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் லண்டனுக்கு விஜயம் செய்வார். லண்டன் விஜயத்தின்போது எதிர்வரும் 23ஆம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயரை ரணில் சந்திப்பார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ட்ரோ, வெளிநாட்டு அபிவிருத்திக்கான அமைச்சர் திருமதி சிமோஸ் ஆகியோரையும் பிரதமர் சந்திப்பார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைச்சாவடிகளை மீண்டும் அமைக்கும் யோசனையை புலிகள் முற்றாக நிராகரித்தனர்

### அரசுடனான வவுணதீவுச் சந்திப்பில்

கொக்கட்டிச்சோலை,ஜூன்17

அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று வவுணதீவு பிரதேச செயலகத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இங்கு மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைத் தலைவர் ஜேம் ஜேகப்சன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அரசாங்கத்தின் சார்பில் கிழக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தலைமையிலான குழுவும், புலிகளின் சார்பில் மட்டு. - அம்பாறை விசேட தளபதி ரமேஷ் தலைமையிலான குழுவும் கலந்துகொண்டன.

மட்டுநகரில் நடைபெறுகின்ற மர்மக் கொலைகள், புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 பொலிஸாரின் விடுதலை, மட்டுநகரில் வீதிச் சோதனைச்சாவடிகளை மீண்டும் அமைப்பது போன்ற விடயங்கள் சந்திப்பின் போது படையினரால் புலிகளிடம் தெரிவிக்கப்பட்டன.

இதற்குப் பதிலளித்த புலிகள் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலேயே கொலைகள் நடைபெறுகின்றன. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் எமது அங்கத்தவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர் விவரம்

### மாகாண அமைச்சால் நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்17

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி நிரந்தர நியமனம் பெறும் 909பேரின் பெயர் விவரங்களை மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் 115பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 135பேரும், முல்லைத்தீவு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் அறிக்கை வரும் வரை கருத்துக் கூற முடியாது

### கப்பல் சம்பவம் குறித்து பீரிஸ்

கொழும்பு,ஜூன்17

புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கை வரும்வரை எதுவித கருத்தும் கூறமுடியாது.

அமைச்சர் பேராசியர் ஜி.எல். பீரிஸ் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

செய்தியாளர்கள் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக பல கேள்விகளை எழுப்பி அமைச்சரிடமிருந்து பதிலைப் பெற்றுவிட முயற்சித்தனர் அமைச்சர் இதே பதிலையே மீண்டும்,மீண்டும் தெரிவித்தார்.

## குடாநாட்டில் படையினரின் சோதனைகள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்17

யாழ்.குடாநாட்டில் படையினரின் சோதனைகள் அதிகரித்து வருகின்றன. திடீர் திடீரென சந்திகளில் தோன்றும் படையினரும் பொலிஸாரும் வாகனங்களை மறித்து சோதனையிடுவதுடன் பொதுமக்களிடம் அடையாள அட்டைப் பரிசோதனையையும் மேற்கொள்கின்றனர்.

யாழ்.மாநகரசபை எல்லைப் பகுதிக்குள் இத்தகைய சோதனைகள் நேற்று பரவலாக இடம்பெற்றன.

இராணுவத்தினரின் பாதுகாப்புடன் திடீரென முக்கிய சந்திகளில் தோன்றிய பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் நீண்டநேரம் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

'பீல்ட் பைக்'குகளில் வரும் படையினரும் ஆங்காங்கே சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கடந்த சில நாள்களாக படையினர் மேற்கொண்டுவரும் இத்தகைய கெடுபிடிகளால் மக்கள் மத்தியில் அச்ச உணர்வு தோன்றியுள்ளது. (ம)

## முல்லைக்கடலில் கப்பல் மூழ்கடிப்பு: அரசுக்கு எதிராக சர்வதேச அழுத்தம்?

### ஏற்படலாம் என்கின்றன தூதரகங்கள்

முல்லைத்தீவுக்கு அப்பால் ஆழ்கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டு இருக்கின்றது.

சம்பந்தப்பட்ட கப்பல் குறித்து ஜனாதிபதிக்கு தகவல் கொடுத்த கடற்படை, கண்காணிப்புக் குழுவுக்கு தெரியப்படுத்த முன்னரே சம்பந்தப்பட்ட கப்பல் தொடர்பாகத் தீர்மானங்களை எடுத்து நடவடிக்கைகளை மேற்கொண்டது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உள்ளூராட்சி தேர்தல் சட்டமூலம் மீது நாளை நாடாளுமன்றத்தில் விவாதம்?

கொழும்பு,ஜூன்17,

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் தொடர்பான திருத்தச் சட்டமூலம் மீது நாளை புதன்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் பிரதமரின் கோரிக்கையின் பேரில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே, இந்த திருத்தச் சட்டமூலம் பற்றிய உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்று சபாநாயகருக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், இத்தீர்ப்பை அடுத்தே விவாதம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவாறு நடைபெறுமா இன்றேல் ஒத்திவைக்கப்படுமா என்பது தெரியவரும்.

இத்தேர்தல்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறுமெனத் தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் இன்று காலை மீண்டும் கூடும்போது தகவல், தொழில்நுட்பம் தொடர்பான சட்டமூல விவாதம் நடைபெறும்.

## வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்கள்:

## உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே அடுத்த நடவடிக்கை பற்றி ஆராய்வு

கொழும்பு,ஜூன்17

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து உயர்நீதிமன்ற தீர்ப்பு வெளிவந்த பின்னரே அரசாங்கம் அடுத்த நடவடிக்கை குறித்து ஆராயும்.

செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டபடி எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறுமா அல்லது உள்ளூராட்சித் தேர்தல் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு புதிதாக தேர்தல் நடத்தப்படுமா? என்று செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை. திருத்தச் சட்ட மூலம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டவுடன் அடுத்த நடவடிக்கை குறித்து ஆராயப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் சொன்னார். (ம-3)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்17

வன்னி மாணவர்களின் நன்மை கருதி திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணி கற்கைநெறிக்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

இக்கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுதிகதி கடந்த 15 ஆம் திகதி என்று குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-5)

# சுபத்திரனின் பூதவுடல் கொழும்புக்கு வியாழனன்று அங்கு இறுதிக்கிரியை

யாழ்ப்பாணம்,ஜூன்17

கடந்த சனியன்று யாழ். நகரில் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் மூத்த உறுப்பினரும் கட்சியின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளருமான த.சுபத்திரனின் (றொபேட்) பூதவுடல் நேற்றுக் காலை விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

நேற்றுக்காலை வரை கட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த சுபத்திரனின் பூதவுடல் நேற்றுக்காலை பலத்த பாதுகாப்புடன் பலாலி விமான நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து விமான மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பூதவுடலுடன் கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினர்களும் கொழும்பு சென்றனர்.

நாளைமறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள இறுதிக்கிரியையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான வரதராஜப்பெருமாள் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இறுதிக்கிரியையில் கலந்துகொள்வதற்காக சுபத்திரனின் தாயார் மற்றும் சகோதரி ஆகியோரும் வெளிநாட்டில் இருந்து கொழும்பு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-8-15)

## குடாநாட்டு நிலையை நேரில் பார்க்க

# பொ.ஐ.முன்னணி எம்.பி. தலைமையில் குழு வருகை

யாழ்ப்பாணம்,ஜூன்17

யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவும் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து தெரிந்து கொள்வதற்காகவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான அதாவுட செனிவிரத்ன தலைமையிலான குழு ஒன்று நாளை புதன்கிழமை இங்கு வருகை தரவுள்ளது.

குடாநாட்டில் இராணுவத்தினர் ஏற்படுத்தியுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களால் மக்கள் எதிர்நோக்கும் துன்ப துயரங்களை ஒரு தடவை நேரில் வந்து பாருங்கள் என்று யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் விடுத்த அழைப்பை ஏற்றே இவர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

நாளை காலை வருகை தரும் பொ.ஐ.முன்னணி குழுவினர், யாழ். கரையோரப் பிரதேசங்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள் என்பவற்றை நேரில் சென்று பார்வையிடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நாளைமறுதினம் காலை 9.00 மணியளவில் நடைபெறும் அதன் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்றில் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்வார்கள். (ம-5)

# இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமை பேண குடாநாட்டில் இந்த வாரம் இடம்பெயர் சேவை

யாழ்.குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினைகள் மற்றும் மீறல்களை இனங்காணுவதற்கான இடம்பெயர்சேவை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் ஐந்து தினங்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்படவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் இயங்கும் இடம்பெயர்ந்தோர் செயற்றிட்டப் பிரிவினால் முன்னெடுக்கப்படவுள்ள இந்த இடம்பெயர் சேவையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புத்தளம் மாவட்ட செயற்றிட்ட அதிகாரி ஆசாத், வவுனியா மாவட்ட செயற்றிட்ட அதிகாரி செல்வி ஜெயநிதி, மட்டக்களப்பு மாவட்ட செயற்றிட்ட அதிகாரி கபிலன், திருகோணமலை மாவட்ட செயற்றிட்ட அதிகாரி மணிவண்ணன் மற்றும் யாழ்.மாவட்ட செயற்றிட்ட அதிகாரி செல்வி வி. வேழினி ஆகியோர் கலந்துகொள்வர். இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இவர்கள் கேட்டறிவர். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல், யுத்த அனர்த்தங்களால் பிரிந்து சென்றவர்களில் இதுவரை ஒன்று சேராதவர்களைத் தேடிக் கண்டுபிடித்து சேர்த்துவைத்தல், மாவட்ட வேறுபாட்டால் பிறப்புச் சான்றிதழ்களைப் பெறமுடியாதவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள வழி ஏற்படுத்தல், வாக்காளர் பதிவு இடாப்புக்களைப் பெறுவதில் உள்ள இடர்களை நீக்குதல், இடம்பெயர்ந்த முகாமில் உள்ள அடிப்படைத் தேவைகள் பற்றி ஆராய்தல், நிவாரணம் பெறுவதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்தல் ஆகிய விடயங்கள் இந்த இடம்பெயர் சேவையில் முக்கியமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

எதிர்வரும் 20ஆம் திகதி சுனாகம் சபாபதிப்பிள்ளை இடம்பெயர்ந்தோர் முகாமிலும் 21ஆம் திகதி நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவிலும் 22ஆம் திகதி வேலணை மற்றும் பொன்னாலைப் பகுதிகளிலும் 23ஆம் திகதி மருதங்கேணியிலும் 24ஆம் திகதி மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திலும் இந்த இடம்பெயர் சேவையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக செயற்றிட்ட அதிகாரி செல்வி வல்லிபுரம் வேழினி தெரிவித்துள்ளார். (ம-5-ரி)

# ஜனாதிபதி தலைமையில் சு.க. மாநாடு நிட்டம்புவையில் 22ஆம் திகதி நடக்கும்!

கொழும்பு,ஜூன்17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தில் நடைபெறும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மாநாட்டுக்குத் தலைமை வகிப்பர்.

இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்குவதே இம்மாநாட்டின் முக்கிய குறிக்கோளாக இருக்கும்.

இளைஞர் விவகார பொருளாதாரம், இனப்பிரச்சினை உட்பட முக்கிய நான்கு விடயங்கள் தொடர்பாக மாநாட்டில் பிரேரணைகள் முன்வைக்கப்படும் என்று கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

லக்ஷ்மன் கதிர்காமர், நிமல்சிறிபாலடி, சரத் அமுனுகம ஆகியோர் முன்வைக்கும் பிரேரணைகள் ஆராயப்படும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

# கசிப்பு வைத்திருந்த வழக்கில் திருநகர் வாசிக்கு கடூழியச் சிறை

## ஐந்தாவது தடவை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவர்

யாழ்ப்பாணம், ஜூன்17

கசிப்பு வைத்திருந்தமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் ஐந்தாவது தடவையாக யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், திருநகர் இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த அந்தோனி அரசு சண்முகருக்கே இந்தக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையைச் செலுத்தத்தவறின் அவருக்கு மேலும் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமெனவும் யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நபர் கசிப்புக் குற்றச்சாட்டுக்களின் பேரில் ஏற்கனவே நான்கு தடவைகள் யாழ்.நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார். 12 ஆயிரம் ரூபா, 12 ஆயிரம் ரூபா, 35 ஆயிரம் ரூபா, 45 ஆயிரம் ரூபா ஆகிய முன் தண்டப்பணத்தையும் செலுத்தியுள்ளார்.

ஐந்தாவது தடவையாகவும் அவர் இந்தக் குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப்பட்டதாலேயே அவருக்கு ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## வெண்புறா நிறுவன 10ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்17

வெண்புறா நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டுநிறைவு நிகழ்வும் பன்நோக்கு பயிற்சி நிலையத் திறப்புவிழாவும் நாளை புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் தொழில்சார் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கல், செயற்கை உறுப்புக்கள் வழங்கல் ஆகியன இடம்பெறும். (ம-3)

# வைத்தியசாலைகளின் பணிகள் தொடர்ந்து ஸ்தம்பித நிலையில்!

## மருத்துவர்களின் போராட்டம் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,ஜூன்17

அரசாங்க மருத்துவர்கள் தமது வேலை நிறுத்தப்போராட்டத்தை நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பித்தனர். இதனால் நாடெங்கிலுமுள்ள வைத்தியசாலைகளின் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

மருத்துவர்களின் வேலை நிறுத்தத்தினால் அவசர சத்திரசிகிச்சைகள் தவிர ஏனைய சிகிச்சைகள் யாவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்திருக்கிறார்.

"கடந்த வார இறுதிநாள்களான பூரணைதினம், ஞாயிற்றுக்கிழமை ஆகியவை விடுமுறை நாள்களாகும். இவ்விரு நாள்களிலும் வேலைநிறுத்தம் இடைநிறுத்தப்பட்டதால் நோயாளருக்கு எந்த நன்மையும் கிட்டவில்லை. தேசிய வைத்தியசாலையில் நாளொன்றுக்கு 125 சத்திரசிகிச்சைகள் நடைபெறுவது வழக்கமாகும். வைத்தியசாலை வார்ட்டுகளில் தங்கியிருந்த நோயாளர்களில் பெரும்பாலானோர் வெளியேறிச் சென்றுள்ளனர். வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வருவோரின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது" எனவும் அவர் கூறியிருக்கிறார்.

வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்திருக்கின்றது.

மருத்துவர்கள் மேற்கொண்டிருக்கும் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று ஏழாவது நாளாகத் தொடர்ந்தது.

யாழ்ப்பாணத்திலும் மருத்துவர்கள் போராட்டம் நேற்று மீண்டும் ஆரம்பமானது. போதனாவைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகள் முற்றாகச் செயலிழந்தன. இப்பிரிவுகளில் சிகிச்சை பெற வந்த நூற்றுக்கணக்கான நோயாளர்கள் நண்பகல் வரை காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அத்தியாவசியப் பிரிவுகள் மட்டும் செயற்பட்டன. போராட்டம் இன்னும் தொடருமெனத் தெரிவிக்கப்பட்டது. (ம-15-139)

# பலாலி - இரத்மலானை இடையே விமான சேவை மீண்டும் ஆரம்பம்!

## விபத்தை அடுத்து இடைநிறுத்தப்பட்டிருந்தது

யாழ்ப்பாணம்,ஜூன்17

இடைநிறுத்தப்பட்டிருந்த பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம்பமாகியது.

கடந்த சனியன்று படையினரை ஏற்றிவந்த அன்ரனோவ் ரக விமான ஒன்று பலாலி விமான தளத்தில் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து பயணிகள் விமானப் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது.

அன்றைய தினம் மாலை கொழும்பு செல்வதற்காகப் பலாலி சென்ற பயணிகள் அனைவரும் விமான சேவை இடைநிறுத்தப்பட்டதால் திருப்பி அனுப்பப்பட்டனர். நேற்றுமுன்தினமும் விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்தச் சேவையில் ஈடுபடும் மூன்று தனியார் விமான நிறுவனங்களும் தமது சேவையை நேற்று மீண்டும் ஆரம்பித்தன. பெரும் எண்ணிக்கையானோர் நேற்றைய சேவைகளில் பயணம் செய்தனர். (ம-8)

## மேலதிக நீதிபதி நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

யாழ். மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் நீதிமன்ற நீதிவானாகவும் பா.சுப்பிரமணியமும், ஊர்காவற்றுறை நீதிவானாக திருமதி சிறீநிதி சேகரனும் நேற்றுப் பதவியேற்றுக் கொண்டனர்.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து இருவரும் பதவியேற்றனர். (ம-3)

## பாஷையூர் மீன் சந்தை பாவனைக்கு!

அரியாலை,ஜூன்17

பாஷையூரில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மீன் சந்தை பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த சந்தையில் மீன் விற்பனை இடம்பெற்று வருகின்றது.

கடந்த பல வருடங்களாக இந்தச் சந்தை படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததால் குடாக்கடல் பகுதியில் தொழில்செய்யும் மீனவர்கள் தமது மீன்களை விற்பனை செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். தற்போது பாஷையூர் சந்தை மீண்டும் பாவனைக்கு விடப்பட்டதையடுத்து இந்தச் சிரமங்கள் ஓரளவு தணிந்துள்ளன. (ம-117)

# நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் விவரம்

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களில் நிரந்தர நியமனம் பெற்றவர்களின் விவரங்கள் வலய ரீதியாக வருமாறு:-

**யாழ்.கல்வி வலயம்**

(ஜே.ஏ.செல்வராணி (இருபாலை அ.த.க. பாடசாலை) ஜி.வசந்தமாலினி (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), ஐ.சிவபவானி(யாழ். மத்திய கல்லூரி), எவ்ராதிகா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ஆர்.கஸ்தூரி (ஊரெழு கணேசா வித்தியாலயம்)

எச்.சுதர்சினி (கொக்குவில் அ.த.க. பாடசாலை), ரி.புவனேந்திரன் (ஊரெழு கணேசா வித்தியாலயம்), ஆர்.கலாராணி (யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கே.தயாநிதி (இருபாலை அ.த.க. பாடசாலை), ரி.விஜிதா (வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயம்)

ஏ.ஜே.சுரேசினி (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), ஏ.யாழினி (யாழ்.கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), எம்.அன்ரனற் லக்ஸி (யாழ்.கன்னியர்மடம் மகாவித்தியாலயம்), பி.பரம்சோதி (கோப்பாய கிறிஸ்தவ கல்லூரி), ஐ.அம்பிகாதேவி (அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி)

கே.சத்தியபாமா (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), ஆர்.இந்திரகௌசி (வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்), என்ஸ்ரீரதி (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), ரி.ஜெயதர்சினி (கொழும்புதுறை இந்து மகா வித்தியாலயம்), எம்.யோகராணி (புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்).

வி.சுதாஜினி (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), எஸ்.சுகந்தினி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எம்வெலிசியா கோமதி (சென். ஜோண் பொஸ்கோ), எஸ்.அனட் மரிதாஸ் (சென்ஜோன்பொஸ்கோ), எஸ்.வனஜா (நவக்கிரி அமெரிக்கன் மிஷன்).

ஜே.விஜயகுமாரி (கொக்குவில் இந்துக் கல்லூரி), வை.விஜிதா (நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்), வி.நிஷாந்தினி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.சுஜீவா (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), ஆர்.ஜெயராகினி (நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா).

என்.மாலினி (நீர்வேலி றோ. க. அ.த.க), ரி.சுயாந்தினி (யாழ். கலட்டி மெ.மி.த.க.பாடசாலை), கே.சிலேகா (யாழ்.கன்னியர்மடம் ம.வி), ஏ.றொபின்சன் (பாஷையூர் சென்.அன்ரனி றோ.க), டி.பிரியந்தி மேரியட் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி).

கே.சீவகுமார் (பெரியபுலம் ம.வி), ஜே.மேரிஎஃரெலா (யாழ். திருக் குடும்பக் கன்னியர்மடம் ம.வி), ஆர்.ராகினி (கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), பி.கௌசலா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை),

**வடமராட்சி கல்விவலயம்**

எஸ்.மதிவதனன் (வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலை), கே.இந்திரன் (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), எஸ்.வரதராசா (கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை), பி.கௌசல்யா (கொல்நாவத்தை அ.த.க.பாடசாலை), வி.ஜெயகௌரி (மாதனை மெ.மி.த.க.பாடசாலை), எஸ்.யோகாம்பிகை (தொண்டமனாறு ம.வித்தியாலயம்).

பி.புஷ்பரதி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), கே.ஆமிர்தகலா (வட இந்துமகளிர் கல்லூரி), ரி.சுசிதா (வல்வெட்டி அ.த.க.பாடசாலை)

**தென்மராட்சி கல்வி வலயம்**

எஸ்.பவநீதராணி (கோயிலாக்கண்டி அ.த.க.பாடசாலை), ஆர்.ரதீமலரி (இத்தாவில் அ.த.க.பாடசாலை), கே.மங்கிளதேவி (இடைக் குறிச்சி ஸ்ரீசுப்ரமணிய வித்தியாசாலை), பி.அமிலா (கைதடி கலைவாணி வித்தியாலயம்), வி.சாந்தகௌரி (மட்டுவில் தெற்கு சந்திரோதய வித்தியாலயம்).

என்.உதயராணி (வறணி வடக்கு ஸ்ரீசைவப்பிரகாச வித்தியாலயம்), எஸ்.ரஜிதா (நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை), எஸ்.சுதாஜினி (மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), கே.சந்திரிகா (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), எஸ்.யசோதா (எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை).

**வலிகாமம் கல்வி வலயம்**

ஜெ.ராஜினி (சண்டிலிப்பாய் வித்தியாலயம்), எஸ்.கண்ணன் (சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்), கே.விஜயதாரணி (ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) எஸ்.யாழினி (சென். அன்ரனீஸ் றோ.க.த.க. பாடசாலை ஆர்.பிரியந்தினி (சுதுமலை அ.த.க.பாடசாலை)

ரி.கலாராணி (இணுவில் இந் துக் கல்லூரி), எஸ்.சந்திரகலா மயிலிட்டி றோ.க.த.க.), எஸ்.மைதிலி சங்கானை, அ.மி.த.க பாடசாலை), எஸ்.அகிலா (சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்), எஸ்.ரஜனி (சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்).

எஸ்.சிவனேஸ்வரன் (மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்), யுகாஞ்சனா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை), எஸ்.முரளிதரன் (அராலி முருகமூர்த்தி வித்தியாலயம்), என்.கௌசலா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), எஸ்.தனுஷா (பண்டதரிப்பு மகளிர் கலலூரி).

எஸ்.குகநேசன் (குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), எஸ். அருணந்தி (ஏழாலை மகாவித்தியாலயம்), என்.ஜெயந்தி (கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாலயம்), பி. சாந்தினி (துணைவி. அ.மி.த.க. பாடசாலை), கே.குமுதினி (கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாலயம்), கே. தங்கலட்சுமி (சுழிபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை), வை.கௌரி (மயிலணி சைவ வித்தியாலயம்), எஸ்.கிஷ்ணகுமாரி (சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம்), எஸ்.கவிதா (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), ஜி.மேனகா (உடுவில் மான்ஸ் ம.வி), கே.கைலைநாதன் (சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்), வி.அனுசுயா (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்), பி.வசந்தினி (ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்), எ.பத்மினி (துணைவி அ.மி.த.பாடசாலை) பி.சிவகுமார் (ஏழாலை ம.வி).

வி.ஷதீஸ்வரி மாதகல் நுணசை வித்தியாலயம்), ஆர்.சுமதி (சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம்), ரி.ஜெயகௌரி (சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்), எஸ். லதா (சிற்றம்பலம் வித்தியாலயம்).

கே.சுதர்சினி (ஆனைக்கோட்டை றோ.க.த.பாடசாலை) ஆர்.சறோஜா (குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம்), எஸ்.சுமதி (குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை) ரி.ரூபி (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்) எஸ். ஜீவரேகா சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம்).

ரி.சிவராஜலிங்கம் (பன்னாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை), எஸ அனிற்றாராஜி (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்), பி.தர்சினி (குட்டியப்புலம் அ.மி.த.க. பாடசாலை) எஸ். கோசலா (ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்), ஜே.கே.எரின்தயாளினி (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்).

எஸ்.சுபாபதி (சுன்னாகம் மயிலணி சைவமகாஜனா) வி.சுதர்சினி. (சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்), பி.கௌரி (சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்), பி. சுயாதா (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), ஏ.குகதாசன் (பன்னாகம் மெய்கண்டான் வித்தியாலயம்).

**தீவகக் கல்வி வலயம்**

என்.சித்திரா (வியாவில் சைவ வித்தியாலயம்), கே.தேவமலர் (வியாவில் சைவவித்தியாலயம்), ஆர். ஜோதீஸ்வரி (அனலைதீவு அ.த.க. பாடசாலை), யூடபெர்னாடில் (எழுவைதீவு றோ.க.த. பாடசாலை).

வி.உமாரஞ்சினி (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), கே.சுபதா (நாரந்தனை கணேசா வித்தியாலயம்), டி.யசோதினி (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), ரி.சுகந்தினி (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்),

**கிளிநொச்சி மாவட்டம்**
**கிளிநொச்சி கல்விவலயம்**

எஸ்.அகிலேஸ்வரி. (அக்கராயன ம.வி), எஸ்.அருளானந்தசிவம் (உமையாள்புரம் அ.த.க. பாடசாலை), எம். வளர்மதி (ஆனைவிழுந்தான் அ.த.க. பாடசாலை), பி.பத்மராஜி (முழங் காவில் ம.வி), வை.சுதாஜினி (கிளிநொச்சி சென்..திரேசா மகளிர் கல்லூரி).

யு.குணசீலன் (மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலை), எம்.சிவமோகன் (பூநகரி மகாவித்தியாலயம்), பி.கௌசல்யா (சென். அன்ரனிஸ் வித்தியாலயம்), ஆர்.கோமதி (சென்.அன்ரனிஸ் வித்தியாலயம்), ஆர்.நித்தியா, (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை), எஸ்.வசந்த சசிகலா (புன்னை நீராவி அ.த.க. பாடசாலை), என்.சண்முகலிங்கம் (இராமநாதபுரம் ம.வி).

ஆ.வாசுகி (கிளி.நாகேந்திரா வித்தியாலயம்), ஏ.சி.தவராணி (ஆனையிறவு அ.த.க.பாடசாலை), ஆர்.ராகினி (நாகேஸ்வரா வித்தியாலயம்), கே.செல்வராசா (கனகபுரம் ம.வி), எஸ்.சின்னையா (ஒட்டுப்புலம் அ.த.க பாடசாலை), பி.ஆர். தவச்செல்வி (பன்னங்கண்டி அ.த.க. பாடசாலை), ரி.பழனிவேல் (நாகேந்திரா அ.த.க.பாடசாலை).

பி.றூபாகினி (கண்டாவளை ம.வி), எஸ்.சிவதரன் (கறுக்காத் தீவு அ.த.க. பாடசாலை), ஜி.விஜயரஜினி (பன்னங்கண்டி அ.த.க.பாடசாலை), எஸ். தேவரஞ்சினி (யூனியன் குளம் அதக. பாடசாலை), கே.மனோகரன் (பன்னங்கண்டி அ.த.க.பாடசாலை), எஸ். யசோதா (பூநகரி, நல்லூர் ம.வி), எம். விஜயலதா (வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை).

என்.கவியரசி(இராமநாதபுரம்ம.வி), எஸ்.நளாயினி(இராமநாதபுரம் ம.வி), எஸ்.கலாநிதி (கல்மடுநகர் அ.த. பாடசாலை) வி.லோகேஸ்வரி கனகாம்பிகைக்குளம் ம.வி.), எஸ்.சுபாஜினி, (நகேஸ்வரா வித்தியாலயம்), வி.நாகமணி (இராமநாதபுரம், மேற்கு அ.த.க.பாடசாலை), எஸ்.செல்வராணி (புன்னை நீராவி அ.த.க.பாடசாலை).

வி.ஜெயசுதன் (பிரமந்தனாறு ம.வி.), ஆர்.குமுதினி (பிரமந்தனாறு ம.வி.), எஸ்.சுமதி (நாகேந்திரா வித்தியாலயம்), ஜி.மஞ்சுளா (பிரமந்தனாறு ம.வி.), கே.சந்திரகுமார் (சோழியன் தீவு அதக.பாடசாலை), எஸ்.சியாமளா (நாகபடுவான், அ.த. க.பாடசாலை.

ஏ.விஜயா (கிராஞ்சி அ.த.க. பாடசாலை), கே.உதயவிஜயகுமாரி (உருத்திரபுரம் மகாவித்தியாலயம்), எம்.யூடி (இராமநாதபுரம் கிழக்கு, அ.த.க.பாடசாலை), தி.வத்சலா (நாகபடுவான், அ.த.க. பாடசாலை); லூனி துஷாரா (ஜெயபுரம், அ.த.க. பாடசாலை), என்.ஸ்ரீரஞ்சினி (சின்னாவில் அ.த.க. பாடசாலை) எஸ்.துவாரஞ்சனி (அக்கராயன் ம.வி.), ஆர்.ஜீவப்பிரியா (சென். திரேசா பெண்கள் கல்லூரி), எஸ்.சிவனேஸ்வரி (பரந்தன் அ.த.க. பாடசாலை), ஆர்.ரகுநாதன் (அக்கராயன் அ.த.க.பாடசாலை), வி. அருள்மலர் (அக்கராயன் அ.த.க. பாடசாலை), ரி.புஸ்பமலர் (அக்கராயன் அ.த.க.பாடசாலை), எஸ்.மீன் (அக்கராயன் அ.த.க. பாடசாலை).

பி.அன்பழகி (வவுனிக்குளம் மகா வித்தியாலயம்), எஸ்ஜெயலட்சுமி (கிளிநொச்சி ம.வி), எம்.மனோகர் (கனகபுரம் ம.வி.), ஆர்.கீதா (கனகபுரம் ம.வி.); ஏ.கே.ஆரோக்கியராஜா (சிவபாதக் கலையகம் வித்தியாலயம்), எஸ்ஜெறீனோல்டா (வன்னேரிக்குளம் ம.வி.), ரி.இராஜேஸ்வரி. (வேரவில் அ.த.க.பாடசாலை), பி.சிரூபராணி (வேரவில் அ.த.க.பாடசாலை),

ரி.தேவரஞ்சினி (கிராஞ்சி அ.த.க. பாடசாலை), எம்மாலினி (பூநகரி மவி), ஏ.சிவகுமாரி (வன்னேரிக்குளம் ம.வி.), பி.பரமேஸ்வரி (குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம்), கே.தமயந்தி (முரசுமோட்டை அ.த.க.பாடசாலை), எஸ். கேமமாலினி (கறுக்காய்தீவு அ.த.க. பாடசாலை), அருட்சகோதரி ஏ.எஸ். எஃப்ஸிஸ்லைஸ் (பத்தினியா.றோ.க.த.க. பாடசாலை), எம்.யசோதா (முழங்காவில் ம.வி.), மேரி லூர்துநாயகி (புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), ஏலைஸ்ஜேசி(இரணைதீவு றோ.க.த.பாடசாலை), என்.வசந்தமலர் (கன்னங்கிராய் அ.த.க.பாடசாலை), பிசுகந்தன் (இராமநாதபுரம் அ.த.க. பாடசாலை).

எஸ்.ஜெயதேவன் (மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை); எஸ்.கல்பனா (வலைப்பாடு றோ. க.த.பாடசாலை), அருட்சகோதரி சீமன் செல்வி (பல்லவராயன்கட்டு அ.த.க.பாடசாலை), எம்.மேரி மேசிடஸ் (கறுக்காய்தீவு அ.த.க. பாடசாலை), எஸ்.சுபாசினி (பிரமந்தனாறு ம.வி.), வை.தர்சினி (வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை), என். பத்மநாதன்(தர்மபுரம் ம.வி.), எஸ். வாகினி கட்டைக்காடு அ.த.க.பாடசாலை), ஆர்.புஸ்பலதா (திருவையாறு ம.வி.), எஸ்.கணேசராஜா (முழங்காவில் ம.வி.), வி.வசந்தகுமாரி (ஆனையிறவு அ.த.க.பாடசாலை), பி.விஜேஜனா (தர்மபுரம் அ.த.க.பாடசாலை), பி.சுபாஜினி (வட்டக்கச்சி ம.வி.), பி.கே.பெனடிற்றா (உமையாள்புரம் அ.த.க. பாடசாலை), கே.ராகினி (பரமங்கிராய் அ.த.க.பாடசாலை).

ரி.நகுலேஸ்வரி (பூநகரி ம.வி.), ஆர்.உதயவதனி (பூநகரி ம.வி.), ரி. கீதாஞ்சலி (கல்மடுநகர் அ.த.க. பாடசாலை), எஸ்.சாரதாதேவி (ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலை), ஆர்.விஜயலட்சுமி (ஒட்டறுத்தபுலம் அ.த.க.பாடசாலை), வி.எம்.பி.டெனிஜியா (வட்டக்கச்சி ம.வி.), எம்.ஜெகதீஸ்வரன் (பாரதி வித்தியாலயம்), ஜே.பரிமளகாந்தி (இராமநாதன் மேற்கு அ.த.க. பாடசாலை), ஏ.மேரி நிர்மலா (வேரவில் அ.த.க. பாடசாலை).

ஜி.வினோதினி (ஆனைவிழுந்தான்குளம் அ.த.க.பாடசாலை), எஸ். ஜெயந்தினி (திருவையாறு ம.வி.), வி.கோகிலா (கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை).

ஜி.நிர்மலாவதனி(ஜெயபுரம் அ.த.க.பாடசாலை), வி.ஜெயசீலன் (கண்டாவளை ம.வி.), கே.ரேணுகாதேவி (அக்கராயன் ம.வி.), பி.இளஞ்செழியன் (முருகானந்தா ம.வி.), வி. மாதுளன் (பெரியகுளம் ஐய்யனார் வித்தியாலயம்), கே.கோகிலன் (ஆனையிறவு அ.த.க. பாடசாலை), எஸ்.ஜினோவா (ஒட்டுப்புலம் அ.த.க. பாடசாலை), எஸ்.மகேந்திரராசா (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

வி.சசிகுமார் (முருகானந்த ம.வி.), எஸ்.ஸ்ரீமாலினி (புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), பி.பாக்கியானந்தி (அக்கராயன் ம.வி.), எஸ். மங்களேஸ்வரி (ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை), எஸ்.மஞ்சுளா (அக்கராயன் ம.வி.), வி.கேமாவதி (பூநகரி ம.வி.), எஸ்.கனிஸ்ரெலா (செம்மன் குன்று அ.த.க.பாடசாலை), என்.ருக்குமணி (செம்பன்குன்று அ.த.க.பாடசாலை), ஆர்.செல்நாதன் (முருகானந்த ம.வி.), கே.நித்தியகலா (புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), எஸ்.விக்னேஸ்வரன் (இராமநாத புரம் ம.வி.), கே.அசோக்குமார் (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

வி.புதுமலர் (புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), வை.கிதாஞ்சலி (இராமநாதபுரம் ம.வி.), ஜே. சிவசோதி (உமையாள்புரம் ம.வி.), ரி.சற்சதிபதி (பற்றிமா றோ.க.த.பாடசாலை), என்.சபாநாயகம் (வன்னேரிக்குளம் ம.வி.), வி.மலர்விழி (செம்பன் குன்று அ.த.க. பாடசாலை), எஸ்.அன்புநிதி (புதிய புன்னைநீராவி அ.த.க. பாடசாலை), ரி.அனுபாமா (பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்), எஸ். சசிகலா (பன்னங்கண்டி அ.த.க. பாடசாலை).

கே.இரஞ்சிதமலர்(சாமிப்புலவு அ.த.க.பாடசாலை), பி.மயோ றொக்கி (வள்ளிப்பாடு றோ.க. வித்தியாலயம்), ரி.சுபதினா (வள்ளிப்பாடு றோ.க.வித்தியாலயம்), எ.றதீகா (வள்ளிப்பாடு றோ.க. வித்தியாலயம்), என். சிவானந்தி (முழங்காவில் ம.வி.), எஸ்.நகுலேஸ்வரியம்மா (சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), எஸ்.நேசநாயகம்(கௌதாரிமுனை அ.த.க. பாடசாலை).

(எ-10)

# நயினை செல்லும் பக்தர்களுக்கு குறிகாட்டுவானில் விசேட 'பாஸ்'!

## செயலகக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன்17

நயினாதீவு நாகபூஷணி ஆலய உற்சவத்திற்குச் செல்வோர் குறிகாட்டுவான் சோதனைச் சாவடியில் பாஸ் பெற்றே செல்லவேண்டும்.

- இவ்வாறு யாழ்.செயலகத்தில் நடைபெற்ற நயினை உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ்.செயலக மேலதிக அரச அதிபர் திருமதி பி.திலகநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்வாலோசனைக் கூட்டத்தில் வடபிரதேச பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் எஸ்.மணிவாசகம், கடற்படை அதிகாரி எச்.எ.சி.குணதிலக, நெடுந்தீவு உதவிப் பிரதேச செயலர் பி. பேரானந்தம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எக்ஸ்.செல்வநாயகம் மற்றும் வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ்.லோகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது -

நயினை உற்சவத்திற்கு யாழ்.குடாநாட்டில் இருந்து பயணம் செய்வோரின் நன்மை கருதி 40பஸ்களும் 16படகுகளும் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சேவையில் ஈடுபடும் படகுகளை பரிசோதித்து தகுதிச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகளை கடற்படையினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட படகுகளில் கடற்படையினரால் அனுமதிக்கப்பட்டவர்களே பயணம் செய்யமுடியும்.

யாழ்.குடாநாட்டில் இருந்து செல்லும் பக்தர்கள் அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியில் சோதனைக்குட்படுத்தப்படுவர். குறிக்காட்டுவான் சோதனைச்சாவடியில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு பாஸ் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பாஸில் குறிப்பிடப்பட்ட அனைவரும் வந்தாலேயே மீண்டும் இவர்கள் திரும்பிவருவதற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் அக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5-ரி)

# தீவகத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீடுகள் அன்பளிப்பு

## 'கியூடெக்' வழங்குகிறது

வன்னிப் பகுதியில் இருந்து திரும்பிவந்து தீவகத்தில் மீளக்குடியமரும் மக்களின் நலன்கருதி யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்) சுமார் 232 வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

இவ்வீடுகளை உரியவர்களிடம் கையளிக்கும் வைபவம் நாளை புதன்கிழமை மாலை 4மணிக்கு அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலய விளையாட்டு மைதானத்தில் கியூடெக் நிறுவன இயக்குநர் வண. பிரத. கி.யோ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் அதிவண பிதா. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் வீடுகளை உரியவர்களிடம் கையளிப்பார்.

இதுதொடர்பாக கியூடெக் நிறுவன இயக்குநர் தெரிவித்ததாவது:-

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களினால் அல்லைப்பிட்டி, வேலணை, மண்டைதீவு மற்றும் சாட்டி ஆகிய பிரதேசங்களில் இருந்து வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்து வரும் மக்களின் நன்மை கருதி பிரான்ஸ் அரசின் அனுசரணையுடன் ஒவ்வொன்றும் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 232 புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாது எமது நிறுவனம் 25 தண்ணீர்த் தொட்டிகளையும், 50 மலசலகூடங்களையும் அமைத்துள்ளதோடு. 9வீடுகளை புனர்நிர்மாணம் செய்துள்ளது.

இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் 50 பயனாளிகளுக்கு 2ஆடுகள் வீதம் வழங்குவதற்கும், 61 மீனவக்குடும்பங்களிற்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார் அவர்.

(ஒ-5-ரி)

### சமய பாட செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் சமயபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார் (ஒ-117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்
(கிளை மேற்பார்வையாளர்)



## தோழர் திரு.சுப்பிரமணியம் சேய்மானந்தன்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 13.06.2003 வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுள்ளதையிட்டு அவருக்கு எமது மனப்பூர்வமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தோழமையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம.

*கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,*
(19194) *கிளை – நல்லூர் ப.நோ.கூ. சங்கம்.*

---

முப்பத்தொருநாள்
நீங்காத நினைவுகளின் நிழலாகிவிட்ட

# நினைவலைகள்

மண்ணில் 03 - 04 - 1922



மகிமையில் 18 - 05 - 2003

## பொன்னர் மாரிமுத்து (றெபேக்காள் அம்மா)

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல்
பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள்
பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். (வெளி 14:13)

ஊர்காவற்றுறை
(யாழ்ப்பாணம்). (19144)

நினைவுடன் வாழும்:
அன்பு மகன் பொ.ராசநாயகம்.

---

# 5ஆவது வருட அஞ்சலி

பிறப்பு 31 - 01 - 1977



இறப்பு 17 - 06 - 1998

## குணரெத்தினம் சசிகரன்

ஆண்டும் ஐந்து ஆயிற்றோ அந்தோ நீ எமைப்பிரிந்து
ஈண்டும்மை நினைந்தே இப்புவுலகில் வாழ்கின்றோம்.

30, ஜமுனா வீதி, நல்லூர். (19198) - குடும்பத்தினர்.

---

## கால்நடை வைத்தியர் அலுவலகம் மீண்டும் சாவகச்சேரியில்

தென்மராட்சி,ஜுன்17

தென்மராட்சி கால்நடை வைத்தியர் அலுவலகம் மீண்டும் சாவகச்சேரியில் இயங்கத் தொடங்கியுள்ளது.

வாரத்தில் திங்கள் தொடக்கம் சனிக்கிழமை வரை இந்த அலுவலகம் திறந்திருக்கும் எனவும் -

பிரதி புதன்கிழமைகளில் கோழிகளுக்கான நோய்த்தடுப்பு மருந்து வழங்கப்படும் என்றும் -

கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார். (எ-117)

## மட்டுவில் ஆலயத்தில் குதிரை வாகனம் திருட்டு!

தென்மராட்சி,ஜுன்17

மட்டுவில் சந்திரபுரம் வேம்படி கந்தசாமி ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த குதிரை வாகனம் கடந்த வாரம் திருட்டுப் போயுள்ளது.

(எ-117)

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஜுன்17

சாவகச்சேரி டச்சு வீதி, பூவேந்தன் பாலர் பராமரிப்பு இல்ல சிறார்களின் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி தென்னகத் தாரகை விளையாட்டு மைதானத்தில் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்வார். (எ-117)

## ஊனமுற்றோர் பாதுகாப்புக் குழுக்கள்

செம்பியன்பற்று, ஜுன்17

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று கிராமசேவக அலுவலர் பிரிவுகளில் ஊனமுற்றோர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

கேவில் போக்கறுப்பு, முள்ளியான், வெற்றிலைகேணி ஆகிய மூன்று கிராமசேவக அலுவலர் பிரிவுகளிலேயே இந்தக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை சம்பந்தப்பட்ட கிராமசேவக அலுவலர் அலுவலகங்களில் நடைபெறுமென மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளார். (எ-36)

## முஸ்லிம் பகுதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி,ஜுன் 17

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளின் அபிவிருத்திக்கு 19லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக சிரானின் மேலதிகப் பணிப்பாளர் எஸ்.எல்.எம்.பலீல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், முஸ்லிம் தெருப் பகுதியில் மலசலகூடங்கள் அமைக்க 3லட்சத்து 60ஆயிரம் ரூபாவும், கிணறுகள் அமைக்க 70லட்சத்து 50ஆயிரம் ரூபாவும், வீதிப்புனரமைப்புக்கு 4லட்சத்து 30ஆயிரம் ரூபாவும், வடிகால் அமைப்புக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். (ஒ-ரி)

---

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

## 17-06-2003




வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
திரு.திருமதி சிவகுமார்–நந்தினி
தம்பதிகளின் செல்வப் புதல்வி

## செல்வி டிலக்ஷனா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (17-06-2003) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். **செல்வி டிலக்ஷனாவை** பாசமிகு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, பெரியமாமா, சின்னமாமா, சின்னமாமி, சித்தி, மச்சான், மச்சாள், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அருள்பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று உளமார வாழ்த்துகின்றோம்.

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. (19190) திரு.திருமதி சிவகுமார் குடும்பத்தினர்.

---

உ

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| 19.06.2003 | வியாழக்கிழமை | கொடியேற்றம் பகல் 11.00மணி |
| 23.06.2003 | திங்கட்கிழமை | தண்டிகைத் திருவிழா மாலை 7.00மணி |
| 26.06.2003 | வியாழக்கிழமை | சப்பறத் திருவிழா மாலை 7.00மணி |
| 27.06.2003 | வெள்ளிக்கிழமை | தேர் உற்சவம் பகல் 10.00மணி |
| 28.06.2003 | சனிக்கிழமை | தீர்த்தோற்சவம் பகல் 10.00மணி |

(C28428) - ஆலய அறங்காவலர்கள்.

---

# 7ஆம் ஆண்டு நினைவு தினம்

அன்னை மடியில் 10 - 02 - 1933



ஆண்டவன் அடியில் 04 - 07 - 1996

## அமரர் வல்லிபுரம் இராசரெத்தினம்

(இளைப்பாறிய O.L.D.O ஒவசியர்)

திதி: 17-06-2003

எங்களை வாழவைத்த தெய்வம்
ஆண்டவன் அடியினைச் சேர்ந்த நாளில்
நின்னை நினைத்து வருந்துதே எங்கள் மனம்.
பிறந்த வீட்டில் உத்தமனாய்,
புகுந்த வீட்டில் புத்தொளியாய்,
கைப்பிடித்த காரிகைக்கு கலங்கரை விளக்காய்,
பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு கல்விதனைப் புகட்டி,
பாசமிகு தந்தையாய், பிள்ளைகளைக் கரம் பிடித்த மருமக்களுக்கு
நேசமுள்ள மாமனாய், பேரக்குழந்தைகளுக்கு அன்பு காட்டிய
பேரனாய் வாழ்ந்திருந்து காலமெல்லாம் எங்களைக் கண்ணீரில்
தவிக்க விட்டு ஏழு ஆண்டுகள் பறந்தோடி விட்டதையா!
உங்களுக்கு உயிர் கொடுத்த உத்தமனாம் இறை நிழலில் நீர் வாழ
அந்த இறைவனையே இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பாசமிகு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (19173)

---



ஈரவிழிகளுடனும் நெஞ்சகலா நினைவுகளுடனும்

# ஓராண்டு நினைவஞ்சலி

## சிவகுலம் சியாமினி

(பபி)

பிறப்பு 18-05-1979 இறப்பு 28-06-2002

ஆண்டுகள் பலவாயினும்
ஆறாது எமது நெஞ்சம்.

உன் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

தையிட்டிபுலம்,
தெல்லிப்பழை. (19138)

உதயன்

# புலிகளைச் சீண்டும் பொறுப்பற்ற போக்கு!

கடந்த ஒரு மாதகாலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் நாட்டு மக்கள் மத்தியில் மீண்டும் ஓர் அச்ச உணர்வையும் பயப்பிராந்தியையும் ஏற்படுத்தி வருகின்றன.

இரண்டு தசாப்தகால இனப் போருக்கு முடிவு கட்டி, சமாதான வழியில் நிரந்தரமான அமைதித்தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிகள், சமாதானப் பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதாகப் புலிகள் விடுத்த அறிவிப்பை அடுத்து ஸ்தம்பித்துப் போயின. அதன் பின்னர் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் - மோசமான நிகழ்வுகள் - நிலைமை மேலும் சீர்கெட்டுப் போவதையே வெளிப்படுத்துவனவாக உள்ளன.

விடுதலைப் புலிகளை எந்தப் பக்கத்தில் சீண்டினால் அவர்கள் சீற்றமுறுவார்கள் என்பதைத் தேடிப் பிடித்து அரசுத் தரப்பு சீண்டுவதாகவே தெரிகின்றது.

இலங்கைத் தரப்பைப் பொறுத்தவரை அதன் அதிகார மையம் இரண்டு தரப்புகளால் பிரிந்து நிற்பதை ஏற்கனவே புலிகள் தெளிவாகச் சுட்டி வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒருபுறம், நிறைவேற்று அதிகாரங்களுடன் ஜனாதிபதி குமாரதுங்க. மறுபுறம், நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அரசுத் தலைவராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்த இருவரில் பிரதமர் ரணிலோடுதான் கைகோர்த்து சமாதான முயற்சிகளை ஆரம்பித்தார்கள் புலிகள்.

"வாருங்கள் நாங்கள் இருதரப்பினரும் விட்டுக் கொடுத்துப் பேசித்தீர்ப்போம்" என்று ரணில் விடுத்த அழைப்பை முழு மனதோடு ஏற்றுக்கொண்டார் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன். அதன் விளைவாக யுத்தநிறுத்தம் செய்யப்பட்டது; புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது; ஆறு சுற்றுப் பேச்சுக்களும் உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டமும் நடந்தேறின.

ஆனால், ஒப்பந்தம் மூலமும் பேச்சு மூலமும் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதால் அதிருப்தியடைந்த புலிகள் சமாதான முயற்சிகளை இடைநிறுத்தினர். அதன் பின்னர் தான் நிலைமை விபரீதமானது.

"வாருங்கள்பேச!" என்று அழைத்த பிரதமர், "பேசசுக்கு வந்து நாங்கள் சர்வதேச - வலிமைமிக்க - நாடுகளின் - உதவியோடு விரித்திருக்கும் சர்வதேச வலைப்பின்னலில் - பொறியில் - வந்து விழுங்கள்!" என்பதைக் கூறாமல் சதித்திட்டமாக வைத்திருக்கின்றார் என்பதை உணர்ந்தபோது - அறிந்துகொண்ட போது - புலிகளின் இயல்பான சீற்றம் சீறி வெளிப்பட்டது.

இந்தப் பிராந்தியத்தைச் சேராத வெளிச்சக்திகளை இந்த விவகாரத்தில் தலையிட வைப்பதன் மூலம் தமிழர் தரப்பின் நியாயமான போராட்டத்தை அடக்க இலங்கை அரசு முயல்கின்றது எனப் புலிகள் பகிரங்கமாகவே குற்றம் சுமத்தினர்.

பிரதமரும் அவரது அரசும் இந்தப் பிராந்தியத்துக்கு அப்பாற்பட்ட சக்திகளை வலிந்து இவ் விவகாரத்துக்குள் இழுத்து வருவது ஒருபுறமும், மற்றைய அதிகார மையத்தை வைத்திருக்கும் ஜனாதிபதியோ, இப் பிராந்தியத்துக்குரிய சக்தியையே வரித்து அணைத்து இவ்விவகாரத்துக்குள் புகுத்த துடியாய் துடிப்பது மறுபுறத்திலும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்பக் கங்கணம் கட்டி நிற்பவர் ஜனாதிபதி குமாரதுங்கா என்பது ஊரறிந்த இரகசியம். அவருக்குப் பின்னால் கடற்படை அணிதிரண்டு நிற்பதும் அது போன்றே.

ஜனாதிபதியின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் விதத்தில் கிழக்குக் கடலில் புலிகளை நியாயமற்ற முறையில் சீண்டும் அத்துமீறல்கள் தொடர்கின்றன. கடற்படையால் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தையொட்டி கிழக்குக் கடலில் இந்திய ஹெலிகளும் இலங்கைப் படையினருடன் கள (கடல்) முனையில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகத் தகவல்.

இது புலிகளுக்கெதிராக இப் பிராந்திய வல்லாதிக்க நாட்டை மீண்டும் களத்தில் இறக்கும் பெரும் சதித்திட்ட - தொடர் - செயற்பாட்டின் ஓர் அங்கம் தான்.

இவ்வாறு ஒருபுறம் புலிகளுடன் சமாதானப் பேச்சு என்று நடித்துக்கொண்டு மறுபுறம் சர்வதேச சக்திகளை புலிகளுக்கெதிராகத் திரட்டி, புலிகளை அழிக்க முற்படுவது, தோளில் கையோட்டுக்கொண்டு காலுக்குக் கீழ் குழிபறிப்பது போன்ற நடவடிக்கையாகும்.

இத்தகைய நடிப்புப்போக்கு - ஏமாற்று வேலை - புலிகளைச் சீண்டும் செயலன்றி வேறில்லை. புலிகள் மிரண்டால் நாடு கொள்ளுமா என்பதுதான் இப்போது மக்கள் மனதை நெருடும் கேள்வி.

# திருட்டு சந்தேகநபர் கைதடியில் பிடிபட்டார்!

கைதடி, ஜுன்17

கைதடிப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் பலவற்றிற்குக் காரணமானவர் என்று கூறப்படும் ஒருவரை பொது மக்கள் பிடித்து சாவகச்சேரிப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை கைதடி வடக்கில் இந்தநபர் பிடிபட்டதாகக் கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக கைதடிப் பகுதியில் பல இடங்களில் இரவு வேளைகளில் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்தநிலையில், கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் மூவர் கைதடி வடக்கு வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று வந்ததை அப்பகுதி மக்கள் அவதானித்தனர். அவர்களை விசாரித்த போது தாம் மிளகாய்க் கொள்வனவுக்காக வந்தவர்கள் எனக் கூறினார்கள்.

அன்றைய தினம் இரவு அந்த மூவரும் திருட்டு நடவடிக்கைக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்ததாகவும் - அப்போது அவர்களைப் பொதுமக்கள் சுற்றி வளைத்ததாகவும் -

அப்போது இருவர் தப்பியோடி விட ஒருவர் மட்டும் அகப்பட்டதாகவும் - கூறப்படுகிறது. உடனடியாக அந்நபர் சாவகச்சேரிப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அப்பகுதியில் திருடப்பட்ட சில பொருள்கள் மேற்படி நபரின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அவனியின் முதல்வி நீயே

பாரதி தன் பாட்டினாலே
  பருக்கினான் தமிழ் உணர்வை
தீராத தமிழ்ப்பசிபோக
  தீத்தினான் கண்ணதாசன்
சீராகப் பசி மாறாதபோது
  சேக்கிழார் குழைத்துத் தந்தார்
ஆராத காதலோடு எனக்கு அரும்பாலை
  கம்பன் தந்தான்
பேரான ஔவைப்பாட்டி
  பெரும் கனி பிழிந்து தந்தாள்
நேராக வாழ்வாய் என்று
  நெறி சொன்னான் குறளின் ஆசான்
ஊரார்க்கு ஊழ்வினை சொல்ல
  உணர்வினை இளங்கோ தந்தான்
பாருக்கு இவரைத் தந்த
  பைந்தமிழ் தாயே அன்றோ
ஆரம்மா ஈடுனக்கு
  அவனியின் முதல்வி நீயே!

- விகடகவி.

# இனத்துக்காக உழைத்தோரை நினைவுகூரத் தவறிவிடாதீர்!

## கந்த முருகேசனாரின் நிகழ்வில் பண்டிதர் பரந்தாமன்

செம்பியன்பற்று,ஜுன்17

மொழிக்காக - இனத்துக்காக - நாட்டுக்காக - உழைத்தவரை போற்றவும், நினைவு கூரவும் தவறக்கூடாது. அவ்வாறு செய்ய நாம் தவறுவோமானால் இனத்தின் வாழ்வும் பெருமையும் அழிந்துவிடும்.

- இவ்வாறு தென்புலோலி மூதறிஞர் கந்த முருகேசனாரின் 38ஆவது நினைவு தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பண்டிதர் வீ.பரந்தாமன் தெரிவித்தார்.

அவர்தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஓர்ஊருக்கு அல்லது ஒருநாட்டுக்கு ஓங்கியுயர்ந்த கோபுரங்களினாலோ, உப்பரிகைகளாலோ உண்மையான பெருமை ஏற்படுவதில்லை. கல்வியிற் சிறந்த பேரறிஞரும், பெரியாரும் மொழி, இனம் நாடு வாழ அருஞ்செயல் செய்தோரும் தோன்றுவதே பெருமை.

தொல்காப்பியர் தோன்றி தமிழுக்குப் பெருமை சேர்த்தார். வள்ளுவர் தோன்றி தமிழினத்துக்கும், உலகுக்கும் பெருமையளித்தார்.

ஈழத்துப்பூதந்தேவனார், ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள், ஞானப்பிரகாசர், தங்கத்தாத்தா, கதிரவேற்பிள்ளை, கந்த முருகேசனார் முதலிய பெரியோர் தோன்றியமையால் தமிழீழம் பெருமையடைகிறது.

எனவே, சமூகத்துக்காக உழைத்தோரை நினைவு கூருவதானால் நாம் பெருமகிழ்ச்சி அடைவது மாத்திரமல்ல, எதிர்காலத்திலும் மொழி, இனம் நாட்டுக்காக உழைக்கும் ஈகம் நிறைந்த பெரியோர் உருவாகுவதற்கு ஊக்கமும் அளிக்கின்றோம் என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும் - என்றார். (எ-36)

# 3 ஆயிரத்து 510 குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் ரூபா 25 ஆயிரம்

## 'நிகொட்' பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி,ஜுன்17

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் இதுவரை 3 ஆயிரத்து 510 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக்கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட 'நிகொட்' நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் 16 ஆயிரத்து 757 குடும்பங்கள் மீளக் குடியமர்த்துள்ளன. இவர்களில் தற்போது முதற்கட்டமாக 3 ஆயிரத்து 510 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்குப் படிப்படியாக கொடுப்பனவு வழங்கப்படும்.

மீளக்குடியமர்ந்துள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒரேநேரத்தில் இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்குரிய நிதி எமக்குக் கிடைக்கவில்லை. கட்டம் கட்டமாகக் கிடைக்கும் நிதியின் மூலம் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே ஆயிரத்து 978 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவில் ஆரம்ப கட்டக்கொடுப்பனவுகளான 10 ஆயிரம் மற்றும் 5 ஆயிரம் ரூபாவுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன - என்று அவர் மேலும் கூறினார். (எ-10-ரி)

# யாழ்.ஆஸ்பத்திரி வாயில்கள் இரவு நேரங்களில் இருளில்

யாழ்ப்பாணம்,ஜுன்17

யாழ்.போதனா வைத்தியசாலையின் நுழைவாயில்களில் வெளிச்ச வசதி செய்யப்படாமையினால், இரவில் செல்லும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

ஊழியர்கள் நுழைவாயில்,வெளிநோயாளர் நுழைவாயில் மற்றும் கிளினிக் நுழைவாயில் ஆகிய இடங்களில் போதிய வெளிச்சம் கிடைக்க ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இரவு நேரங்களில் அவசர நோயாளர்களுடன் வருகைதரும் வாகனங்கள் நுழைவாயிற் பகுதிகளில் விபத்துக்களைச் சந்திக்கும் அபாயம் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஏற்கனவே வைத்தியசாலைச் சூழலை அறிந்தவர்கள் தவிர ஏனையோர், நுழைவாயிற் பகுதிகளில் விபத்துக்களைச் சந்திக்க அதிக வாய்ப்புள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து, குறைந்தது வாயிலுக்கொரு 'சோடியம்' மின்குமிழையாவது பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-9)

### நாளை

ஆனி 03
புதன்கிழமை
(18.06.2003)
திதி : சதுர்த்தி
முற்பகல் 9.38 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
பிற்பகல் 4.29 வரை.
சுபநேரம் : 4.23-5.53
ராகுகாலம் : 11.53-1.23
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தவறுகளைத் திருத்திக் கொள்ளாததே மிகப் பெரிய தவறாகும்.

## தமிழீழ வைப்பகத்தின் ஏற்பாட்டில்

# சுழற்சிமுறை கடன் மூலம் வன்னியில் 'சோலர்' விநியோகம்

கிளிநொச்சி,ஜுன்17

வன்னிப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் தமிழீழ வைப்பகத்தினால் 'சோலர்' கருவிகள் (கதிர்ஒளி மின் கலம்) வழங்கப்பட்டு வருவதாக வைப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வீரத்தேவன் தெரிவித்துள்ளார்.

சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்றரை தொடக்கம் இரண்டு வருடகால கடன் அடிப்படையில் இவை வழங்கப்பட்டு வருகின்றன என்றும் -

வங்கிக் கணக்கில் குறைந்தது 5ஆயிரம் ரூபா வைப்பில் உள்ளவர்களுக்கு இவை வழங்கப்படுவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

'அக்ஸ்ஸ சோலர்' நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதுவரை 60 பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

தமிழீழ வைப்பகத்தின் வேண்டுகோளுக்கமைய உலக வங்கி யினால் 10ஆயிரம் ரூபா விலைக் கழிவு இவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (எ-10-ரி)

# மிதிவெடி அகற்றுவதில் புதிய திட்டம் நடைமுறை

யாழ்ப்பாணம்,ஜுன்17

குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துவரும் மக்களின் நலனை கருத்திற்கொண்டு, மிதிவெடி அகற்றும் இடங்களைத் தெரிவு செய்வதில் புதிய நடைமுறையை மிதிவெடி செயற்பாட்டுக் குழு பின்பற்றவுள்ளது.

இதுதொடர்பாக மிதிவெடி செயற்பாட்டு தகவல் பிரிவு அலுவலர் எல்.மோ.ஆனந்தராஜா தெரிவித்ததாவது -

பெரும் நிலப்பரப்புகளிலேயே தற்போது கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால், மீள்குடியமர்வு இடம்பெறும் பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகள் தாமதமடைகின்றன.

இந்நிலையில், மீளக்குடியமரும் மக்களின் நலன்கருதிப் புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி, மீளக் குடியமரும் மக்கள், பிரதேச செயலகம் ஊடாக அப்பகுதியில் உள்ள கண்ணிவெடி அச்சுறுத்தல் குறித்து தகவல் தந்தால் முன்னுரிமை அடிப்படையில் அங்கு கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (ஒ)

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர்த்துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

★ *100% இளமையையும் வலிமையையும் தரும்!*

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


*MANUFACTURED BY:*
**SITHARA PRODUCTS,**
PUTTALAM ROAD.
(REG.NO: 6382) AR/PR/No. 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். TP:222 2567.

(C/28352)


முருகன் அடி சேர்ந்த

## முதல் ஆண்டு நினைவு

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 29 - 03 - 1922 |  | 28 - 06 - 2002 |

## அமரர் மாணிக்கம் கந்தசாமி

(மணி அண்ணை)

திதி: 17-06-2003

நல்லை நகர்க் கந்தனவன் நற்கழல்கள் பாடியே
தொல்லைவினை நீக்கினனே கந்த பக்தன் – வல்லவனே
ஆணிப்பொன் அம்பலவன் அடிமலர்கள் சேர்ந்தனனே
மாணிக்கம் கந்தசாமி.
பாராண்ட நல்லைக்கந்தன் பக்தனவன் கந்தசாமி
ஓராண்டு நினைவுமலர் நாம் சொல்வோம் – சீராண்ட
அவராத்மா சிவபதத்தில் என்றென்றும் பெறுகவே
தவமான முத்தியாம் பேறு.

17/18, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(19125)

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## இடம்பெயர்ந்த 106 குடும்பங்கள் வலி.கிழக்கில்

வலி.கிழக்கு,ஜூன்17

வேறு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களில் 106 குடும்பங்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தஞ்சம் புகுந்துள்ளன என்று பிரதேச செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரதேசத்தில் நிரந்தரமாக 17 ஆயிரத்து 414 குடும்பங்களும் இடம்பெயர்ந்து 2,ஆயிரத்து 106 குடும்பங்களும் வசித்து வருகின்றன.

இதேவேளை - உரும்பிராய் தெற்கு, கிழக்கு ஆகிய நலன்புரி நிலையங்களில் 146 குடும்பங்கள் தங்கியுள்ளன.

இடம்பெயர்ந்து இப்பிரதேசத்தில் வசிப்போரில் 95 சதவீதமானோர் வலி.வடக்கு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ-180)

## தவறவிட்ட பணப்பை கிடைத்தது

சாவகச்சேரி,ஜூன்17

சாவகச்சேரி கனகன்புளியடிச் சந்திக்குச் சமீபமாக பெரும் தொகைப் பணம் மற்றும் அடையாள அட்டை, வெளிநாட்டுப் பயண ஆவணங்களுடன கூடிய பணப்பையை (பேர்ஸ்) தவற விட்ட ஒருவர் பின்னர் அதனை மீளப் பெற்றுக்கொண்டார்.

சரசாலை இராணுவ முகாமில் பணிபுரியும் இராணுவத்தின் பொறியியல பிரிவைச் சேர்ந்த சந்திரசிறி சில்வா என்ற சிப்பாய் அந்தப் பேர்ஸினைக் கண்டெடுத்து முகாம் பொறுப்பதிகாரி ஊடாக சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உதவியுடன் உரியவரிடம் சேர்ப்பித்தார்.

மீசாலையைச் சேர்ந்த ஜயாத்துரை நவரத்தினம் என்பவரே பேர்ஸை தவறிவிட்டவராவார். (ஐ-31)

## மயானங்களில் சிரமதானம்

மாகியப்பிட்டி - கொட்டுப்பனை மயானங்கள் வலிவடக்கு பிரதேச சபை அலுவலர்களால் சிரமதானம் மூலம் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாது பற்றைக்காடாக இருந்த மயானங்களே மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன. (ஒ-185)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 13 - 10 - 1939 |  | 19 - 05 - 2003 |

## திருமதி மகேஸ்வரி வீரகத்தி

(ஓய்வுபெற்ற அதிபர், யா/குடமியன் அ.த.க. பாடசாலை)

திதி: அபரபக்க சதுர்த்தி

**'அம்மா அம்மா' என்றழுதழுது சோர்ந்து விட்டோம்**
**அம்மா! இனியெமக்கு யாரம்மா! தாயம்மா!**
**அம்மா நீங்களெமை 'ஆளாக்கி' இனிது வைத்து**
**அம்மா என்றலறியழ அவசரமாய்ப் போனதெங்கோ?**

எமது 'குடும்ப விளக்கு' அணைந்த செய்திகேட்டு ஓடோடி வந்து எங்கள் துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறிப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் அனுதாபச் செய்திகள், கண்ணீர் அஞ்சலிகள், மலர் அஞ்சலிகள் செலுத்தியும் மலர்வளையங்கள் வைத்தும் அஞ்சலித்த அன்புள்ளங்களுக்கும், அன்னை நோயுற்ற வேளையில் அக்கறையுடன் சிகிச்சையளித்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்

நாளை (18-06-2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'குமரகிரி',
குடமியன், வரணி.


(19164)

திரு.ஆ.வீரகத்தி
குடும்பத்தினர்.


## சுடர் ஒளி

22.06.2003 இதழில்

விலை 16/=




- வளமிழந்து கருகுகிறது வன்னியிலே கல்வி வாழ்வு
- தொல்லைகள் அறுக்கும் பலமே தமிழர்களின் பாதுகாப்பு கவசம் (நேரடி)
- மரண தண்டனைக்கு தூண்டும் சட்டவிரோத குற்றச் செயல்கள்
- ஸ்டாலினுக்கு சூட்டப்பட்டிருப்பது மகுடமா முள்கிரீடமா ?
- சமாதான முயற்சிகளில் அதிகரிக்கும் இடைவெளி
- மட்டு. மக்களை சூழும் அச்சம்
- புலம்பெயர்ந்த தமிழர்களின் மீள்வருகை குடாநாட்டில் (வடபுலம்)
- மீண்டும் சூடுபிடித்துள்ள கிளிண்டன் – மொனிக்கா விவகாரம்

மற்றும் அரசியல் அம்பலம், அதிசயம் ஆனால் உண்மை, சினிமா, விளையாட்டு, இளஞ்சுடர், மசாலா மிக்ஸ், பித்தன் பதில்கள், கவிதைப்புனல்.

(சி-28431)

# உயர் பதவிகளைப் பங்குபோடுவது மட்டுமே சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டின் பின்னணி

## பொதுச் செயலாளர் பதவிக்கு அனுராவைக் கொண்டுவர சிலர் முயற்சி

ஐ.தே.முன்னணியிடமிருந்து அரசாங்கத்தைப் பறித்தெடுக்கும் சாணக்கியத் திட்டங்கள் ஒருபுறம் தீவிரமாக வகுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அதற்கு முன் ஆட்சி கிடைத்தால், அதன் பதவிகளை எவ்வாறு பங்கு போட்டுக்கொள்ள வேண்டும் என்னும் ஒத்திகை போன்று ஸ்ரீல.சு.கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான பதவிப் பங்கீட்டுப் பேரங்கள் நடைபெறுவ



தாக செய்திகள் வெளிப்படுகின்றன.

முழு முக்கியமான பிரச்சினை, வசதி கருதி கைவிடப்பட்டிருப்பது அதிர்ச்சிக்குரியது. எந்தவித பரபரப்பும் இல்லாமல் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விடயம் அடக்கி வாசிக்கப்படுகிறது. ஆனால், நீறு பூத்த நெருப்பாக பொ.ஐ.முன்னணியின் உள்ளேயே மறைந்து கிடந்து சரியான நேரத்தில வெடிக்கக்கூடிய காலக்குண்டாகவும் இது இருக்கின்றது.

அதனை விடவும் முக்கியமாக அமையக்கூடிய புதிய கூட்டோ அந்தக் கூட்டின் கைகளில் கிடைக்கக்கூடிய அரசாங்கமோ சந்திக்கக்கூடிய பிரச்சினைகளையும் அதன் ஆயுளையும் குறித்துக்காட்டுவதாகவும் உள்ளது.

### மாற்று அரசாங்க நிலை

பொ.ஐ.மு. இந்நாட்டின் மாற்று அரசாங்கமாக இருக்கிறது என்பது எமது விருப்புக்குப் புறம்பாக உள்ள யதார்த்தமாகும்.

இந்த முன்னணிக்குள் புதிதாக வந்து சேரவிருக்கும் ஜே.வி.பி, சில பதவிகளைக் குறித்த நிபந்தனைகளை வைத்திருக்கிறதாம். முன்னணியின் கேந்திரப் பதவியிலான பொதுச செயலாளர் பதவியையும் அத்துடன் அமைச்சுப் பதவிகள் சிலவற்றையும் குறித்துக் காட்டியிருக்கிறதாம்.

ஊடகத்துறை அமைச்சையும் விவசாய அமைச்சையும் கண் வைத்திருக்கிறது. பொதுச் செயலாளர் பதவி விடயத்தில் சிவப்புக் கட்சிக்காரருக்கு சிவப்புக் கொடியே காட்டப்பட்டுள்ளதாம். ஏனைய பதவி கோரிக்கைகள் பற்றி முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னரே தெரியவரலாம்.

பொதுச்செயலாளர் பதவிக்கு சுதந்திரக் கட்சியின் உள்ளேயே போட்டிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அடுத்த ஜனாதிபதி தேர்தலின் போது அதன் வேட்பாளராக நிற்கக்கூடிய அனுரா பண்டாரநாயக்காவுக்கே அது சேர வேண்டும் என்ற அபிப்பிராயங்கள் கட்சிக்குள் இருக்கின்றன. இந்த நிலையில், இப்போது பொதுச் செயலாளராக இருக்கும் டீ.எம்.ஜயரத்னவுக்கே அப்பதவி கிடைக்கும் சூழ்நிலை இல்லை.

இது மட்டுமல்ல சேவை' மூப்பின் அடிப்படையில், தான் அடையவேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மிகவும் தாமதமாகவே பெற்று மிகுந்த சிரமத்துடன் அதனைக் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அது எட்டாக்கனி. இதனால், இது பெரும்பாலும் முடிவு செய்யப்பட்ட விடயம் போலவே தென்படுகிறது.

அரசியல் ரீதியான அதிகாரப் பரவலாக்கம் வேண்டாம் என்ற பிடிவாதத்தில் ஜே.வி.பி.தோற்று விட்டது போலவே பொதுச் செயலாளர் பதவியைக் கேட்டும் தோற்று விட்டது என்லாம்.

தோல்வி ஜே.வி.பிக்குப் புதியதல்ல. நன்கு திட்டமிடாமலும் இளைஞர்களை இன, மத வேறுபாட்டிற்கு அப்பால் முழுமையாக அணி திரட்டாமலும் புரட்சிகர வர்க்கமான தொழிலாளர்களைக் கேலி செய்து கொண்டும் மக்களின் மனோநிலையை நன்கு கணிப்பிடாமலும் அவசரப்பட்டு 1971ஆம் ஆண்டு ஆயுதக் கிளர்ச்சியை நடத்தி படுதோல்வியடைந்தது ஜே.வி.பி.

கிளர்ச்சி தினத்தன்று யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியும் தோல்வியுற்றது. பலாலியில் இருந்து வந்த இராணுவத்தினரால் கோட்டையினுள் வைத்து தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

### தகுதிகாண் அரசு

2001ஆம் ஆண்டில் பொ.ஐ.முன்னணியுடன் இணைந்து தகுதிகாண் அரசாங்கத்தை அமைத்த சில மாதங்களிலேயே அந்த அமைச்சரவையின் மூளைசாலிகளும் திறமைசாலிகளும் வெளியேறிவிட, அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. அதிலும் ஜே.வி.பி. எதிர்பார்த்தவைகள் கிடைக்கவில்லை. தோல்வி.

அதிகாரம் தமது கைகளில் இருந்து நழுவிப்போகும் போதெல்



லாம் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமை இடதுசாரிகளையும் முற்போக்காளர்களையும் சேர்த்துக்கொண்டு ஆட்சிக்கெதிரான போராட்டங்களை முன்னெடுப்பதில் தனித்திறமை கொண்டிருப்பதை வரலாறு காட்டுகிறது.

1964இல் பெரும்பான்மை இழந்து ஆட்சி பறிபோகும் நிலையில் டாக்டா என்.எம்.பெரேராவுக்கு நிதியமைச்சையும், பீற்றர் கெனமனுக்கும் முக்கிய பதவிகள் வழங்கி தன்னை சோஷலிசவாதியாகக் காட்டிக்கொண்டது சுதந்திரக்கட்சி.

அந்த கூட்டு காரணமாக இடதுசாரிகளின் வளர்ச்சி தடைப்பட்டது டன், இன்று கடிதத் தலைப்புக்கள் மட்டும் மிஞ்சிய நிலையில் அக்கட்சிகள் பெயரளவில் இயங்குகின்றன.

ஆட்சிக்கெதிரான போராட்டங்களை நடத்துவதற்கு இடதுசாரிகளை அணைக்கும் சுதந்திரக்கட்சித் தலைமை அதிகாரம் கைக்கு வந்த பின் அவர்களை ஓரங்கட்டி விடுவதிலும் தனித்துவம் பெற்றது.

இதோ! புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாராகிவிட்டது. இந்தமாதம் ஒப்பமிடப்படும் என்று கடந்த மூன்று மாதங்களாக ஆரவாரம் காட்டப்பட்டு வருகின்றதாயினும் அது ஒப்பமிடப்படாமல் பிற்போடப்பட்டே வருகிறது.

சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஜே.வி.பியின் வருகையை எதிர்க்கின்றன. எதிர்க்கட்சித் தலைவா மஹிந்த ராஜபக்ஷவும் கூட ஜே.வி.பி. உள்ளே வருவதை ஆதரிப்பவர் அல்லர்.

மேலும் சில மூத்த சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் எதிர்க்கும் நிலையிலும் பிரதான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையிலும் ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைந்தால் அதனாலும் ஜே.வி.பி. நீண்ட காலக் கண்ணோட்டத்தில் தோல்வியைத் தழுவும் நிலை ஏற்படலாம்.

பாரம்பரிய இடதுசாரிகள் 1964ஆம ஆண்டு திருமதி பண்டாரநாயக்காவின் அரசில் இணைந்தபோது அவர்களுக்கிருந்த பெரும் மன உற்சாகமும், மக்கள் மத்தியில் இணைப்புக்கிருந்த வரவேற்பும் இன்று உள்ளதை விடவும் பல மடங்குகள் அதிகமாகவே இருந்தன.

இன்று மிகவும் பலவீனமான ஒரு கூட்டே முன்வைக்கப்பட்டிருக்கிறது.

ஐ.தே.முன்னணியிடமிருந்து ஆட்சியைப் பறிப்பது மட்டுமோ அல்லது அதற்கு வேண்டிய எம்.பிக்களின் எண்ணிக்கையைச் சேர்ப்பதோ மட்டும், கூட்டின் நோக்கமாக இருக்கவில்லை.

2005இல் நடத்தக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதும் முக்கிய நோக்கமாகும். இதனாலேயே பெரும்பாலும் வலதுசாரிக் கருத்துக்களில் தீவிரமான அனுரா பண்டாரநாயக்க, ஜே.வி.பியை மிகவும் ஆதரித்து செயற்படுகிறார் எனலாம்.

சுதந்திரக்கட்சியினுள் பண்டாரநாயக்காவுக்குப் போட்டியாக எழக்கூடியவர் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மஹிந்தராஜபக்ஷ என்பதால், அதே மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள ஜே.வி.பிய்யை அணைத்துக் கொள்வது தீர்க்கதரிசனமாகும்.

ஜே.வி.பியின் முக்கிய எதிரியாக அம்பாந்தோட்டையில் விளங்கும்



மஹிந்தராஜபக்ஷ பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினுள் அனுரா பண்டாரநாயக்கவின் போட்டியாளராக இருக்கிறார்.

இந்நிலையில், ஜே.வி.பி., பண்டாரநாயக்காவை பொதுச்செயலாளர் பதவி விவகாரத்தில் மட்டுமல்லாமல் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றிலும் ஆதரிப்பதில் ஆச்சரியம் இல்லை.

மொத்தத்தில் பதவிகளைப் பங்கு போடுவதில் ஏற்பட்டுள்ள தேவையே சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கூட்டு ஏற்படுவதற்குள்ள பின்னணியாகும்.

சமாதானத்தைக் குழப்ப நினைக்கும் சக்திகளுக்கு இதுவொரு வரவேற்கத்தக்க விடயம். இவர்களின் கூட்டு வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும என்று வாழ்த்துபவர்களுள் நிச்சயம் ஆயுதக்காரர்களும் அடங்குவர் என்பதையும் கூறத் தேவையில்லை.

முதலில் அபிவிருத்தி லொத்தர் சபையில் கைவைத்தாயிற்று. அரசாங்கத்தில் கை வைக்கப்படுமா? ★

~கலைவாணன்~

---

(வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவில்)

## கிராமிய புனர்வாழ்வுக் குழுக்களின் செயற்பாடுகளை விளக்க கூட்டங்கள்

வலிகாமம் தெற்கு,ஜூன்17

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கிராமிய புனர்வாழ்வு புனரமைப்புக் குழுக்களினது தேவைகள், அவற்றின் செயற்பாடுகளை விளக்கும் பொருட்டு பிரதேச செயலக மட்ட புனர்வாழ்வு புனரமைப்புக்குழு கிராமம் தோறும் விஜயம் செய்து கூட்டங்களை நடத்தி வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் உடுவில தென்மேற்கு, உடுவில் தென்கிழக்கு, உடுவில் மத்தி, உடுவில் வடமத்தி, உடுவில் வடக்கு, சங்குவேலி கிராம அலுவலர் பிரிவுகளுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு குழுவினா பங்குபற்றுவுள்ளனர்.

சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம் மத்தி, கந்தரோடை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான குழுக்களின் கூட்டம் இம் மாதம் 20ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

21ஆம் திகதி காலை 10 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினை, குப்பிளான் வடக்கு, குப்பிளான் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகளின் குழுக் கூட்டம் புன்னாலைக்கட்டுவன் அமெரிக்கமிஷன் தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இணுவில் தென்மேற்கு, இணுவில் தென்கிழக்கு, இணுவில் கிழக்கு, இணுவில் மேற்கு, தாவடி வடக்கு, தாவடி தெற்கு, தாவடி கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கான கூட்டம் 23ஆம் திகதி காலை 10 மணிக்கு இணுவில் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறும்.

வலி.தெற்கு உதவிப் பிரதேச செயலர் தலைமையில் இந்தக் கூட்டங்கள் நடைபெறும். (எ-152)



பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் நடத்திய பாராட்டு விழாவில் வித்தியாலய அதிபர் கா.நடராசா, சிவஸ்ரீ க.சுந்தரராசக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-28)

## சுன்னாகத்தில் நூலகக் கண்காட்சி

வலிகாமம் தெற்கு,ஜூன்17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் இம்மாதம் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் மாபெரும் நூலகக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே நூலக பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் -

நூலகத்தின் சேவையை மேம்படுத்தும் பொருட்டும் இந்த நூலக கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தில் இடம்பெற உள்ள இந்த நூலகக் கண்காட்சியினை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி ஆரம்பித்து வைப்பார்.

பாடசாலை மாணவர்களை இந் நூலகக்கண்காட்சிக்கு அழைத்து வந்து காண்பித்து நூலகப் பயன்பாட்டை ஏற்படுத்துமாறும், பொது மக்களும் பார்வையிட்டு பயனடையுமாறு வலிகாமம் தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-152)

## தமிழ்த்தின போட்டிகள்

வலிகாமம் தெற்கு,ஜூன்17

வலிகாமம் கல்வி வலயத்துக்கான பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டிகள் இம்மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

19ஆம் திகதி எழுத்தாக்கம், இசைத்திறன் போட்டிகளும், 20ஆம் திகதி நாட்டுக்கூத்து போட்டிகளும் 21ஆம் திகதி இசை, வில்லுப்பாட்டு, விவாதம், தமிழ் அறிவு வினாவிடைப் போட்டிகளும் -

22ஆம் திகதி வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், நாடகம், நடனம் என்பனவற்றுடன் முஸ்லிம் மாணவர்களின் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (எ-152)

(ஜூன் 23 முதல் 29 வரை)

## போதைப்பொருள் தவிர்ப்பு வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

வலிகாமம் தெற்கு,ஜூன்17

இம்மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதிவரை போதைப்பொருள் தவிர்ப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான செயற்பாடுகளை பாடசாலைகளில் அமுல்படுத்தி அது தொடர்பான அறிக்கையை கோட்டக் கல்வி அதிகாரிகளூடாக தமக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலைகள் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.சிறிசேனா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அதிபர், பிரதி அதிபர், சமயப் பிரமுகர்கள், அழகியற் கல்வி ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள் மற்றும் போதைப்பொருள் தவிர்ப்பு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினை நிறுவி செயற்படுமாறும் -

தேசிய முக்கியத்துவத்தை நிறைவேற்றுவதற்காக செயற்படுத்தப்படும் இந்நிகழ்வை உணர்வுபூர்வமாக செயற்படுத்துமாறும் - அவர் கோரியுள்ளார். (எ-152)



மாலிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் சம்மேளன மண்டபத்தில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கீரிமலை கமநல கேந்திர நிலைய பிரிவு விவசாயப் போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். கூட்டத்திற்கு தலைமை வகித்த சம்மேளனத் தலைவர் சி.ம.வ.க.முதலியாரும் படத்தில் காணப்படுகின்றார்.

(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்.)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணிகள் விற்பனைக்கு

செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்திலும், செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூரிலும உள்ள காணிகள் முறையே நிலப் பரப்பு 2குளி2 காணியும் நிலப்பரப்பு 1 குளி 5/16 காணியும்(செங்குந்தா பாடசாலைக்கு (முன்பாக) விற்பனைக குண்டு. தொடர்பு:- K.T. ரவீந்திரன் 70, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப் பாணம் (தரகர் தேவையில்லை.)
(19193)

சந்தையடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 1 3/4பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- செபஸ்ரியன் யோகேஸ்வரி (ராணி) சந்தையடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
(19189)

## தவறிவிட்டது

த.சுரேஷ் செல்வராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.651691141V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.28, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குழி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(19175)

## துரித சேவை

புகைப்படச்சுருள்கள், CD, FD போன்றவற்றில் உள்ள படங்களை ACME, VASAN'S, PHOTO CHROME போன்ற விரும்பிய LABஇல் விரைவாக பிறின்ரிங் செய்து தரப்படும். நேரிலும் வந்து தொடர்புகொள்ளப்படும். MASTER, ஸ்ரேசன் வீதி, கனகசபாபதி ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(19017)

## விற்பனைக்கு

40ஸ்ரீ தொடரிலக்கமுடைய 62 பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் வருமானத்தைக் கொண்ட கையேஸ் வான் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு:- "துர்க்கா கலையகம்", முத்திரைச்சந்தி. (19206)

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய சுத்த இன பொமனேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு. தொடர்பு:- செல்வம், இல.107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.(19203)

ஜேர்மன் செப்பேட் பெண்நாய் (ஒருவருட பூர்த்தி) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 352, நாவலர் வீதி, யாழ்ப் பாணம் (அத்தியடி சந்திக்கருகில்). சந்திக்கும் நேரம்: காலை 9.00 மணிக்கு முன்பாக. (19195)

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி ஒழுங்கையில் 8பரப்புக் காணி வீடுவளவுடன், பயன்தரும் மரங் களுடன், சகல வசதிகளுடன் விற்ப னைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் தொடர்புகொள்ளலாம். F.X. நீக்கலஸ், கல்லூரி ஒழுங்கை, வட்டுக கோட்டை (யாழ்ப்பாணக் கல்லூரிக் குப் பின் ஒழுங்கை). (18964)

## சிறுவர் இல்லத்துக்கு அன்பளிப்பு

கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் உள்ள சிறுவர் இல்லத்துக்கு தமிழா புனர்வாழ்வுக் கழகத்தினால் அன்றாட பாவனைப் பொருள்கள் வழங்கப்பட் டுள்ளன.

இல்லத்தில் உள்ள சிறுவர்களின மேம்பாட்டுக்கு உதவியளிக்கும் விதத்திலேயே இப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், உருத்திரபுரம் அரோபணம் இளைஞர் இல்லத்திற்கும் ஒருதொகுதி விளையாட்டு உபகர ணங்கள் வழங்கப்பட்டுள்ளன.(ஒ-10)

## முதலாவது ஆண்டு நினைவு



தோற்றம் 29 - 03 - 1930

மறைவு 27 - 06 - 2002

### அமரர் சுந்தரம் நடராசா

ஆண்டு ஒன்று இன்றுடன் சென்று விட்டாலும் - நாம் என்றும் உங்கள் நினைவுடனே வாழ்வோம்.

குடும்பத்தினர்.

*இல.109, இராஜேஸ்வரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.* (19202)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



மலர்வு 02 - 03 - 1950

உதிர்வு 18 - 05 - 2003

### அமரர் கந்தசாமி பாலேந்திரம்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

காலத்தின் கட்டளையால் எம்மைத்
தனியே தவிக்கவிட்டு இறைவனடி
சேர்ந்த அன்பு அப்பாவே! உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,

இன்று (17.06.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரின் நினைவாக நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறுகின்ற மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முருகன் கோவில் வீதி, நெல்லியடி, கரவெட்டி.* (19207)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

# இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாணம்
# வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல. 2880 - சி.இ. (C.E.)
## தேசிய பேட்டிக் கூறுவிலை கோரல்
## நிர்மாண வேலைகள்
# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி. (I.F.B.)

ஐ.எப்.பி.இல: கிளி/நிர்ப்/சுவே/01 திகதி: 11-06-2003

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.

02. மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

03. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது திருகோணமலையில் மாற்றத் தக்கதான, மாகாணப் பணிப்பாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன்பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 17-07-2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம எந்திரி,**
**மாகாண கட்டடங்கள் திணைக்களம்,**
**பழையகமம், முரசுமோட்டை,**
**பரந்தன், கிளிநொச்சி.**

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், மாகாணப் பணிப்பாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 18-07-2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**கேள்விச்சபை, கட்டடங்கள் திணைக்களம்,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்,**
**உள்துறைமுக வீதி, திருகோணமலை.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விவரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விவரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நிர்ப்/சுவே/1 | மாவட்ட வைத்திய அதிகாரி விடுதி மீள்நிர்மாணம். சுற்றியற் கூறு. பளை | 53,300/- | 750/- | 04 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/சுவே/2 | வெளிநோயாளர் பிரிவு மீள் நிர்மாணம். சுற்றியற்கூறு. பளை | 93,000/- | 750/- | 05 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/சுவே/3 | வெளிநோயாளர் பிரிவு மீள் நிர்மாணம். சுற்றியற்கூறு. பூநகரி | 93,000/- | 750/- | 05 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/சுவே/4 | வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம். கராச்சி | 53,000/- | 750/- | 04 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/சுவே/5 | உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம். சுற்றியற்கூறு. பூநகரி | 41,200/- | 750/- | 04 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/சுவே/6 | உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம். மத்திய மருந்தகம். வேரவில் | 41,200/- | 750/- | 03 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/பிசெ/1 | பிரதேச செயலகமும் பிரதேச செயலாளருக்குரிய விடுதியும் மீள் நிர்மாணம். கராச்சி. கிளிநொச்சி | 302,800/- | 1,000/- | 15 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/பிசெ/2 | உத்தியோகத்தர்களுக்கான விடுதி மீள் நிர்மாணம். மாவட்டச் செயலகம். கிளிநொச்சி | 132,200/- | 1,000/- | 08 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற் பிரமாணக் குறிப்புகள் 04 பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இந்தக்கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒருதனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**மாகாணப் பணிப்பாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்,**
**உள்துறைமுக வீதி, திருகோணமலை.**

(சி-28438)

# வேறிடத்தில் நிலுவையிலுள்ள வழக்கை தமிழீழ நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது!

## கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்17

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கை மீளப்பெற்றாலே, அதே வழக்குத் தொடர்பாக தமிழீழ நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தொடர முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் செந்தூர்.

இதுதொடர்பாக அவர் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குற்றம் இழைத்துவிட்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்து தங்கியிருக்கும் எதிராளிகள் மீது தமிழீழ நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். ஆனால், அக்குற்றம் தொடர்பாக ஸ்ரீலங்கா நீதிமன்றங்களில் பதிவான வழக்கு மீளப்பெறப்பட்டாலே அது சம்பந்தமாக தமிழீழ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

ஸ்ரீலங்கா நீதிமன்றங்களில் நிலுவையில் வழக்கொன்று இருக்கும் போது அதேவிடயம் தொடர்பாக தமிழீழ நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரும் வழக்காளி மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, வழக்கிற்கான சான்றுப் பொருள்களும், தடயங்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்குமானால் அது தொடர்பான வழக்கை தமிழீழ நீதிமன்றம் ஒன்றில் தாக்கல் செய்ய முடியும் - என்று அவர் தெரிவித்தார்.

மாவட்ட நீதியாளர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டப்படி விவாகரத்துப் பெறாது மறுமணம் புரிவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சிலா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வந்து சட்டவிரோதமாக மறுமணம் புரிந்து கொள்கின்றார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில சில பெண்கள் இரண்டாம் தாரமெனத் தெரிந்தே சம்மதிக்கிறார்கள். பல யுவதிகள் இது தெரியாது திருமணம செய்கின்றார்கள். ஆண்களானாலும், பெண்களானாலும் ஒழுக்க விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான, 55வயது நபர் கிளிநொச்சியில் ஒரு பெண்ணை மறுமணம் செய்து கொண்டார்.

அப்பெண் தற்போது கர்ப்பமாக உள்ளார். இந்நிலையில், அந்த நபரின் முதல் மனைவி இது தொடர்பாக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

விசாரணையின் முடிவில், அந்த நபருக்கு 3மாத காலச் சிறைத்தண்டனையும், இரண்டாயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அதுடன் கிளிநொச்சியில் மணந்து கொண்ட பெண்ணின் பிரசவச் செலவை ஏற்றுக்கொள்ளும்படியும், பிறக்கும் குழந்தைக்கு அவரே தந்தை என்று பதிவு செய்யும்படியும் அந்த நபருக்கு உத்தரவிடப்பட்டது. இதைப் போன்று சட்டவிரோதமாக மறுமணம் புரிவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.


வறுமை காரணமாக சிறுவர்கள் தவறான வழிகளில் செல்ல நேரிடுகிறது. சமீபத்தில் பாடசாலை மாணவர்கள் ஐந்து பேர் ஒரு குழுவாக இணைந்து 'பிட்பொக்கற்' அடித்தனர். அவர்களை காவல்துறையினர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

குடும்பத்தில் நிலவும் வறுமையால் வயிற்றுப் பசியைப் போக்க அச்சிறுவர்கள் களவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து அவர்களின் பெற்றோர்கள் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டனர்.

சிறுவர்கள் இத்தகைய செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டால் பெற்றோர் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டு பெற்றோர்களிடம் சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

(ஓ-ரி)



கடந்த மாதம் வீசிய கடும் காற்றின் விளைவாக நேர்ந்த அனர்த்தங்களில் இதுவும் ஒன்று.

கிளிநொச்சி, முறிகண்டிப் பகுதியில் வீதியோர மரம் ஒன்று முறிந்து மோட்டார்சைக்கிள் மீது வீழ்ந்ததால் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

இதன் உரிமையாளரான கிளி/வன்னேரி ம.வித்தியாலய ஆசிரியர் தயாபரன் இந்தச் சம்பவம் இடம்பெற்றவேளை மோ.சைக்கிளை உருட்டியபடி வந்து கொண்டிருந்தார். மரம் முறிந்து விழும் சத்தத்தைக் கேட்டவுடன், மோட்டார் சைக்கிளை விட்டு விலகியதால் அவர் சிறு காயத்துடன் தப்பிக்கொண்டார் எனக் கூறப்பட்டது. *(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*

## பள்ளிச் செய்திகள்

கிளிநொச்சி மாவட்டத்தில்

# சூழலுக்கு ஆபத்து ஏற்படாது மணல் அகழப்பட வேண்டும்!

## மேலதிக அரச அதிபர் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஜூன்17

சுற்றுப்புறச் சூழலுக்கு ஆபத்து ஏற்படாத இடங்களில் மட்டுமே மணல் அகழப்படவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல அகழ்வதற்கென சிபாரிசு செய்யப்பட்ட முறிகண்டி, நச்சுண்டகாடு - கண்ணகிபுரம், பூநகரி - குடமுறிப்பு ஆகிய இடங்களில் மணல்அகழ அனுமதி வழங்கப்படுகிறது. மணல் அகழ்வோர் அந்தந்தப் பகுதி பிரதேச செயலகங்களில் அனுமதி பெற்று மணல் அகழலாம். அனுமதிக்கப்படாத இடங்களில் மணல் அகழ்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டிய விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

திட்டமிடப்படாத முறையில் - கட்டுப்பாடின்றி மணல் அகழப்படுவதால் காட்டுவளம் பாதிப்படைகிறது. இதனால், இயற்கைச் சூழல் மோசமாகச் சீரழிகிறது. இதனைத் தடுக்க தமிழீழ வனவளப் பிரிவும் காவல்துறையினரும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-10)

## இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமரும் நிலையில்

# காணித்தகராறு, எல்லைப் பிரச்சினை கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரிப்பு

கிளிநொச்சி,ஜூன்17

கிளிநொச்சி மாவட்டத்தில் காணித்தகராறுகள் மற்றும் எல்லைப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் வசித்து வந்த பலரும் தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

ஆனால், கடந்தகால யுத்த நடவடிக்கைகளின் காரணமாக காணிகளின் எல்லைவேலிகள் மற்றும் நடுகல்கள் அழிந்துவிட்டன.

இதனால், மீளக்குடியமர்ந்தவர்கள் தத்தமது நிலவுரிமை தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அரச காணிகளில் நீண்டகாலம் வசித்து வந்தவர்கள் இடம்பெயர்ந்து வசித்த பின்னர் மீளக்குடியமர வரும் சந்தர்ப்பங்களில் அந்த நிலங்களில் வேறு குடும்பங்கள் வசிக்கும் நிலை காணப்படுகிறது.

இதன் காரணமாக காணி உரிமை தொடர்பான தகராறுகள் அதிகரிக்கும் நிலையும் இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகிறது.

அரச காணிகளுக்கான உறுதிகள முன்பு குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் தாம்வசித்த காணிகளை உறுதிப்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாகக் காணிகளைக் கொள்வனவு செய்வோர் அவதானமாக செயற்பட வேண்டும் என்றும் -

காணிகளை கொள்வனவு செய்யும் போது தகுந்த ஆதாரங்கள் மற்றும் காணி எல்லைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் -

கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் அறிவுறுத்தியுள்ளார். (எ-10-ரி)

# வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை முறைகள்

**பொ**ருளாதார ரீதியில் இலாபத்தையும், உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்காத காய் கறிகளையும் பெற இலகுவான வழி வீட்டுத்தோட்டச் செய்கையாகும். இந்த வீட்டுத்தோட்டச் செய்கையின் அடிப்படைகளைக் கடந்த வாரம் 'கமமும் புலமும்' பகுதியில் பார்த்தோம்.

சில காய்கறிகளின் பயிரிடும் முறைகளை இந்தவாரம் பார்க்கலாம்.

### கறிமிளகாய்

பச்சைமிளகாய் மற்றும் கறிமிளகாய்ச் செடிகளின் நாற்றுக்களை 2அடிக்கு 2அடி இடைவெளியில் நடுதல் வேண்டும். நடுகைக்கு 2-3 நாள்களுக்கு முன் குழிகளைத் தயாரித்து

## கமமும் புலமும்

2-3 கை நிரம்பிய சேதனப் பசளையைப் பிரயோகிக்கவும். ஒவ்வொரு குழியிலும் இரண்டு நாற்றுக்களை நடவும், உடனே நீரூற்றவும். பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும்போது மேற்கட்டாக ஒவ்வொரு நிலையத்திற்கும் 1½ அல்லது 15கிராம் உரக்கலவையைப் பிரயோகிக்கவும். முதலாவது மேற்கட்டைப் பிரயோகித்து ஏறக்குறைய ஒருமாதத்தின் பின், அதே அளவு உரக்கலவையை இரண்டாவது மேற்கட்டாகப் பிரயோகிக்கவும்.

பராமரிப்பு முறைகளாக மண்ணைக் கிண்டுதல், களை அகற்றல், மண் அணைத்தல், நீரூற்றுதல் போன்றவற்றை ஒழுங்காக மேற்கொள்ளல் வேண்டும்.

### கத்தரி

கத்தரிப் பயிர்ச்செய்கை மிளகாயைப் போன்றதே. நாற்றுக்களை 1x1 மீற்றர் இடைவெளியில் ஒவ்வொரு நிலையத்திலும் இரு நாற்றுக்கள் வீதம் நடுகையை மேற்கொள்ளவும்.

வீரியமான வளர்ச்சியைப் பெறுவதற்கும் விரைவாகக் காய்ப்பதற்கும், நாற்று நட்டு இரண்டு வாரங்களின் பின்பும், ஒரு மாதத்தின் பின்னும் இரு தடவைகளில் நிலையம் ஒன்றுக்கு 1½ - 2தேக்கரண்டி வீதம் மரக்கறிப் பயிர்களுக்கான உரக்கலவையை உபயோகிக்கவும்.

### தக்காளி

தக்காளிக் கன்றுகள் ஏறக்குறைய 15நாள் பருவமாக இருக்கும்போது நாற்றுநடுகையை மேற்கொள்ளலாம். ஒவ்வொரு நிலையத்திலும் இரு நாற்றுக்களை நட்டு, அவை போதியளவு வளர்ந்தவுடன் ஒவ்வொரு நிலையத்திலும் சிறந்த ஒரு கன்றினை விட்டு, மிகுதியை அகற்றி விடவும். நாற்றுநடுகையின் போது வரிசையில் ஓர் அடி இடைவெளியும், வரிசைகளுக்கிடையே இரண்டு அடி இடைவெளியும் வழங்கவும்.

பயிர்கள் நேராக வளர்வதற்காக ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு மீற்றர் உயரமான தடிகளை நடவும், பெரிய பழங்களையும், உயர் விளைவையும் பெறுவதற்காக கீழுள்ள களைகளை அகற்றவும்.

நாற்று நட்டு இரண்டு வாரங்களின் பின்னும் நாலு வாரங்களின் பின்னும் ஒவ்வொரு நிலையத்திற்கும் 1½ - 2தேக்கரண்டி மரக்கறிப் பயிர்களுக்கான உரக்கலவையைப் பிரயோகிக்கவும்.

நாற்று நட்டு, 2½மாதங்களில் அறுவடையை ஆரம்பிக்கலாம்.

### பூசணிக் குடும்பப் பயிர்கள்

புடோல், பாகல், பீர்க்கு ஆகிய மரக்கறிப் பயிர்களுக்கு அதிகளவு சேதனப் பசளைகள் தேவைப்படும். அதனால் ஒவ்வொரு நடுகைக்குழிக்கும் ஒரு கூடை நிரம்பிய சேதனப் பசளை பிரயோகிக்கவும். இப்பயிர்களை நாற்றுமேடையில் நடாது, நேரடியாகவே தோட்டத்தில் நடலாம்.

ஒவ்வொரு நிலையத்திலும் நாலு விதைகளை நட்டு, இரண்டு வாரங்களின் பின் இரண்டு பயிர்களை விட்டு மிகுதியை அகற்றவும்.

இந்த எல்லா மரக்கறிகளுக்கும் 1x1¼மீற்றர் இடைவெளி போதியதாகும். 2-2½மீற்றர் உயரத்தில் பந்தலை அமைத்து கொடிகள் பற்றி வளரக்கூடியதாக ஒவ்வொரு நிலையத்திலும் தடிகளை நடவும்.

நட்டு ஒரு மாதத்தின் பின்னும், இரண்டு மாதங்களின் பின்னும் ஒவ்வொரு நிலையத்திற்கும் இரண்டு தேக்கரண்டி மரக்கறிப் பயிர்களுக்கான உரக்கலவையைப் பிரயோகிக்கவும்.

நட்டு 2-2½ மாதங்களால் அறுவடையை ஆரம்பித்து, அதன் பின் 1½ - 2மாதங்களுக்குத் தொடர்ந்து அறுவடையைப் பெறலாம்.


### வெண்டி

8 அங்குலம் **x** 6அங்குலம் **x** 10 அங்குலம் பருமனில் குழிகளைத் தயாரித்து, ஒவ்வொரு குழிகளிற்கும் ½ கூடை சேதனப் பசளையும், சில கைகள் நிரம்பிய சமையல்கட்டுச் சாம்பலும் இடவும். ஒவ்வொரு குழிக்கும் 2-3 விதைகளை நட்டு, அவை முளைத்து, ஒருசில தினங்களில் ஒவ்வொரு நிலையத்திலும் வீரியமான ஒரு பயிரை விட்டு மிகுதியை அகற்றவும். களைகளை அகற்றுவதற்காக மண்ணை ஒழுங்காகக் கிண்டவும். முளைத்து இரண்டு வாரங்களின பின் ஒவ்வொரு நிலையத்திற்கும் பயிரைச் சுற்றி 2தேக்கரண்டி - மரக்கறிப் பயிர்களுக்கான உரக்கலவையைப் பிரயோகித்து மண்ணுடன் கலந்து விடவும். 1½ - 2மாதங்களில் பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும். வெண்டிக்காய்கள் மிக விரைவில் முதிர்ச்சியுறுவதனால் அவற்றைப் பல தடவைகளில் அறுவடை செய்தல வேண்டும். ஒவ்வொரு பயிரிலிருந்தும் ஏறக்குறைய 10-15 காய்களை விளைவாகப் பெறலாம்.

வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்படும் பயிர்களில் நோய்த்தாக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. ஆகவே, நோய்களைக் கட்டுப்படுத்த கிருமிநாசினிகளைப் பயன்படுத்தலாம். ஆனால், அளவுக்கு மீறிக் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதால் விளைபொருள்கள் நஞ்சுத்தன்மையை அடையக் கூடும். ஆகவே கமநலசேவை அலுவலகங்கள், கேந்திர நிலையங்கள் ஆகியவற்றை அணுகி ஆலோசனையைப் பெறலாம்.

**- விக்டர் -**

# மூன்றாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 03 - 06 - 1953

மறைவு 20 - 06 - 2000

அமரர்

## கந்தையா கருணானந்தன் (இராசா)

திதி: சங்கஹடஹர சதுர்த்தி

ஆயுள்வரையும் அழுவதுதான்
எம் விதியோ?
அழுது கரை காண முடியாது
கலங்கி நிற்கின்றோம்
அப்பா நீங்கள் போன தேசம் தெரிந்து இருந்தால்
எம் துயரங்களை நாம் எழுதி அனுப்பிவைப்போம்!

"சிவபதி"
தாவடி வடக்கு, கொக்குவில்.

துயருறும்:
மனைவி,பிள்ளைகள்.

(19211)


# TELE VOICE நிறுவன சேவை

இன்று யாழ்.நகரிலும் மேசைத் தொலைபேசி
சேவையை வழங்குகின்றது ரெலி வொய்ஸ்!

*இந்தச்சேவையை சிக்கலில்லாத மிகத் தெளிவான முறையில் உரையாடக்கூடியவாறு உத்தரவாதத்துடன் எந்தப் பிரதேசத்திலும் அமைத்துத் தருகின்றனர்.*



வெளியிலிருந்து உள்வரும் அழைப்புக்களுக்கு
இரவில் கட்டணம் இலவசம்!
I.D.D. இணைப்பு இலவசம்!!

தொடர்புகளுக்கு: 0712 387043, 0777 067389, 0777 113663

## ரெலிவொய்ஸ்

இல.13,பெரியகடை, யாழ்ப்பாணம்.
(யாழ்.சந்தை சைக்கிள் பாதுகாப்புக்கும் R.B. புக்கிங் சென்ரருக்கும் அருகில்)

(19212)


# ஆறு கடைகள் நாசம்!

பிபிலை நகரில் நேற்றுக்காலை ஏறபட்ட தீவிபத்து ஒன்றில் ஆறுகடைகள் எரிந்து நாசமாகின.

நகரில் கட்டப்பட்டிருக்கும் சட்ட விரோத கடைத்தொகுதியில் இத் தீவிபத்து ஏற்பட்டது எனவும், எரிந்த கடைகளில் மூன்று ஹோட்டல்கள் அடங்கும் எனவும் பிபிலை பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

# கண்டியில் விபத்து 30பயணிகள் காயம்!

கண்டி,ஜூன்17

வத்தேகம, ஹாராகம ஆகிய இரு இடங்களில் நேற்றுக்காலை நடைபெற்ற இரண்டு விபத்துக்களில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு உள்ளாகினர். இவர்களில 10பேர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

கண்டி வத்தேகம-குடுகல பாதையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பிரயாணம் செய்த 30 பயணிகள் காயமடைந்தனர். அவர்கள் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த பஸ் பரணகம என்னும் இடத்தில் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்ததாலேயே இவ் விபத்து நடைபெற்றது.

இரு தனியார் பஸ்கள் கண்டியில் இருந்து ஹாராகமவுக்கும் ஹங்குராங்கெத்தயில் இருந்து கண்டிக்கும் சேவையாற்றுகையில் குருதெனிய என்னும் இடத்தில் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதனால் இரு பஸ்களிலுமிருந்த பிரயாணிகளில் 10பேர் காயமடைந்தனர். இவர்களும் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வத்தேகம, தலாத்து ஓயா பொலீஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

# மெமோறியல் அன்னையின் கண்ணீர் அஞ்சலி



யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின்
பழைய மாணவனும், -
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபருமான

## அருட்திரு.அ.அ.போல்

அவர்கள் அமரத்துவமடைந்த செய்தி அறிந்தோம். ஆறாத் துயரடைகின்றோம். அன்னாரை இழந்து துயருறும் அனைவருடனும் நாமும் துயர் பகிர்கின்றோம்.
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

*யா/மா.மெ.ஆ.பா.*
*மானிப்பாய்* (19217)

மெமோறியல் குடும்பம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய வரணியூர்

## செல்லையா ஆறுமுகசாமிப்பத்தர்

அவர்கள் 15.06.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மணி ஜுவல்லர்ஸ்,
*கச்சாய் வீதி, சாவகச்சேரி.*
ஈசன் ஜுவல்லறி,
*பிரதான வீதி, சங்கானை.* (19221)

- அன்பு மைத்துனர்
மணி குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆசிரியை
திருமதி கமலேஸ்வரி குமாரசாமி
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி செல்லையா தெய்வானைப்பிள்ளை

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத்துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி. (19219)

ஆசிரியர்
சகோதரத்துவம்

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழு

## சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை நடத்துவதற்கான கேள்வி கோரல் -2003/2004

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் அபிவிருத்திக் குழுவின் சிற்றுண்டிச்சர்லை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் என்பன 01.07.2003இலிருந்து 30.06.2004 வரை (ஒருவருட காலம்) நடத்துவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

எதிர்வரும் 23.06.2003ஆம் திகதி வரை கேள்விகள் ஏற்கப்பட்டு அன்றைய தினம் மு.ப. 11.00 மணியளவில் கேள்விகள் திறக்கப்படும்.

சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திற்கான கேள்விப்படிவங்களும் நிபந்தனைகளும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்படிவத்தை பெற மீளளிக்கப்பெறாத ரூபா 100/- செலுத்துதல் வேண்டும்

டாக்டர்.எஸ்.கதிரவேல்பிள்ளை
(தலைவர்)

(C/28444)

சி.சின்னத்தம்பி
(செயலாளர்)

# யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய

## உயர்தர மாணவர் மன்றத்தினால் பாடசாலை வளர்ச்சிக்காக நடத்தப்பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - 0565 ஆதரவு - (நிறஞ்சனாஸ் ஹாட்வெயர், சங்கானை)
இரண்டாம் பரிசு - 1042 ஆதரவு - (கன்னாதிட்டி மக்கள் வங்கி)
மூன்றாம் பரிசு - 2042 ஆதரவு -(காசிப்பிள்ளை பலசரக்கு மாளிகை)
ஆறுதல் பரிசுகள் - ஆதரவு (ஆசைப்பிள்ளை அன் சன் கோ)

| | | | | |
|---|---|---|---|---|
| 1)2109 | 2)1079 | 3)0941 | 4)1148 | 5)1063 |
| 6)1777 | 7)0775 | 8)1773 | 9)1192 | 10)0663 |

குறிப்பு:- 30.06.2003இற்கு முன்பதாக பாடசாலை நேரத்தில் வந்து ஆவணங்களைக் காட்டி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(19213)

உயர்தர மாணவர் ஒன்றியம்,
யா/ச/சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

# சிவன் துணை

# ஆசாரியபிஷேக அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சுபானு வருடம் ஆனி மாதம் 4ஆம் நாள்(2003.06.18) புதன்கிழமை திருவோண நட்சத்திரமும் பஞ்சமி திதியும் கூடிய சிங்க லக்கினமும் மு.ப. 10.09 மணி முதல் 11.45 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

## பிரம்மஸ்ரீ செ.தங்கசாமி ஐயர் அவர்களின்

புதல்வனாகிய

## பிரம்மஸ்ரீ த.சத்தியானந்த சர்மா அவர்களுக்கு

கரந்தன் மனோன்மணி சமேத சிவபூதநாதேஸ்வரர், ஊரெழு மேற்கு சிவபூரணியம்மன் திருவருளை முன்னிட்டு விஷேட திட்சை, நிர்வாண திட்சை, ஆசாரியபிஷேகம் ஊரெழு மேற்கு சிவபூரணியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறத் திருவருள் கூட்டி வைத்திருப்பதால், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார்கள் அனைவரும் வருகைதந்து மேற்படி முகூர்த்தத்தை நடத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தீட்சாகுரு : சிவாச்சார்யமணி சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்
(அத்தியடி பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுரு)

இங்ஙனம்:
திரு. திருமதி சத்தியானந்த சர்மா
(கரந்தன் மனோன்மணி சமேத சிவபூதநாதேஸ்வரர் தேவஸ்தான அர்ச்சகர்)

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.* (19214)

# நல்லூர் பிரதேச சபை - கேள்வி அறிவித்தல்

## திருநெல்வேலி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம், கொக்குவில் சந்தை (குளப்பிட்டிச்சந்தி)

01.07.2003 தொடக்கம் 31.12.2003 வரையான காலப்பகுதிக்கு கீழே காட்டப்பட்ட கேள்விகள் 26.06.2003ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். 25.06.2003ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். இது சம்பந்தமான நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் தலைமைச் செயலகத்தில் பார்வையிடலாம் என்பதையும் அறியத்தருகிறேன். சித்தி பெற்ற கேள்விகாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையின் அரைப்பங்கை உடன் செலுத்தவேண்டும்.

| நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (வற்வரியுடன்) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய அதன் ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|
| 01. கொக்குவில் உப-அலுவலகச் சந்தை (குளப்பிட்டிச் சந்தி) | 600.00 | 3,000.00 | 83,500.00 |
| 02. திருநெல்வேலி சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 600.00 | 3,000.00 | 1,56,500.00 |

குறிப்பு: கோரப்படும் தொகையுடன் 20% வற்வரியும் மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும்

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

திகதி: 16.06.2003 (C/28443)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி அவர்கள் நேற்று (16.06.2003) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் செல்லமுத்து, நாகேஸ்வரி, முத்துராசா, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் அருளானந்தம், நடேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற தயாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேந்திரராசா, இராமமூர்த்தி, பூமணிதேவி, விக்கினேஸ்வரி, தவமலர், கலாறஞ்சினி (சுவிஸ்), கலைச்செல்வி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2003) செவ்வாய்க் கிழமை பி.ப.2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரியான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.* (19218)

தகவல்:
வே.முத்துராசா
(மகன்)

# பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து ஒரு **பஜாஜ்** மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய **பஜாஜ்** மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு. நீங்கள் நாடுவது வேகமா? சிக்கனமா? அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் **பஜாஜ்** வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். மற்றும் **DPMC** யின் நாடலாவிய ரீதியில் பரந்து காணப்படும் சேவை, பராமரிப்பு மற்றும் உதிரிப்பாக வியாபார வலையமைப்பினூடாகவும், பிராந்திய அலுவலகங்களூடாகவும் தன்னிகரற்ற வேகமான வாடிக்கையாளர் சேவையையும் **DPMC** ஒன்றுதிரட்டிய வளங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இவை அனைத்தினாலேயே **பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிளாக திகழ்கின்றது.

ஒவ்வொரு மோட்டார் சைக்கிளுடனும் ஜக்கட் ஒன்று இலவசம்.

மேற்படி விலைகள் பெ.சே.வரி புற நீங்கலானவை.
மற்றும் விலைகள் முன் அறிவித்தலின்றி மாற்றத்திற்குரியவை.

தன்னிகரற்ற உத்தரவாதம்



**Pulsar**
• 143.43 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• பாதுகாப்பான டிஸ்க் பிரேக் சகிதம்.
விலை ரூபா 107,835/-



**Caliber 115**
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்
• நியம சவாரி நிலைமையில் லீ.க்கு 90 கி.மீ
விலை ரூபா 77,304/-



**Caliber 115** டிஸ்க் பிரேக் உடன்
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• நியம சவாரி நிலைமையில் லீ.க்கு 90 கி.மீ
• பாதுகாப்பான டிஸ்க் பிரேக் முறைமை.
விலை ரூபா 83,285/-



**BOXER CT Deluxe**
• 99.36 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• K-tec தொழில்நுட்பத்துடன் கூடியது
விலை ரூபா 71,526/-



**BOXER CT**
• 99.36 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ
விலை ரூபா 68,566/-



**BOXER AR**
• 99.36 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• K-tec தொழில்நுட்பத்துடன் கூடியது.
விலை ரூபா 64,200/-



**Legend**
• 145.45 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 46 கி.மீ
விலை ரூபா 83,811/-



**bajaj Byk**
• 98 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
விலை ரூபா 58,104/-

**DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.**
75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600
பெக்ஸ் : 074-700677, 687175. ஹொட்லைன் : 074-715050

அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி ட்ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777-979279, 0777-155730

குறிஞ்சி ட்ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே : 0777-979279, 0777-155730

# கண்சிகிச்சை முகாம்கள்

கொழும்புத்துறை,ஜூன்17

இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் இன்று முதல் யாழ்.நகரப் பாடசாலைகள் சிலவற்றில் இடம்பெறவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மற்றும் நாவாந்துறை றோ.க.வித்தியாலத்திலும் -

நாளை புதன்கிழமை பாஷையூர் சென்.அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம், மற்றும் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும -

எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம மற்றும் செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் -

எதிர்வரும் 20 ஆம் திகதி முத்துத் தம்பி வித்தியாலயம் மற்றும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திலும் இந்தக் கண்சிகிச்சை முகாம்கள் இடம்பெறவுள்ளன.(ஒ-30)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் அங்கத்தவரும் விளையாட்டுத் துறையின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் மத்தியஸ்தருமாகிய

**சிவலிங்கம் சுசேந்திரலிங்கம்**

அவர்கள் 13.06.2003 இல் சவூதி அரேபியாவில் அகால மரணமாகிவிட்டார்.

அன்னாரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்

*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*
(C/28439)

*வளர்மதி முன்னேற்றக் கழகத்தினரும்,*
*சனசமூக நிலையத்தினரும்,*
*நிறைவாழ்வு உதவித்திட்டக் குழுவினரும்.*

## 16th Death Anniversary

**Lion A.S.T. CHARI**

*(Principal Emeritus*
*Manipay Hindu College)*

Those whom we hold at high esteem, never leave us They still live on, to recollect the kindness we received, The comfort we shared, and the love brought into our lives.
NO DAY PASSES WITHOUT REMEMBERING YOU.

*Remembered this 17th day of June,*
(19197) **by loving wife, sons and dear ones.**

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 - 10 - 1916



இறப்பு 15 - 06 - 1995

**நாகமணி முத்துச்சாமி (திருமேனி)**

ஆண்டவன் அடிக்கமலம் சென்று ஆண்டும் எட்டு ஆகிவிட்டது.
உங்கள் துணைக்கு மனைவி சோதி அம்மாவையும் 14.06.2003 இல் உங்களுடன் அழைத்துக் கொண்டீர்கள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
*தகவல்:*
*மு.விமலநாதன (மகன்)*
*விதானையார் வீதி,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.* (19199)

*இப்பொழுது உங்கள் நினைவுடன் மீளாத்துயரில் மூழ்வாய்த் துடிக்கும் :*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துச்சாமி சோதி அம்மா

கரம்பொன் மேற்கைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துச்சாமி சோதி அம்மா அவர்கள் 14-06-2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி (திருமேனி) அவர்களின் அன்பு மனைவியும் பத்மநாதன் (றிக்கோ), கனகேஸ்வரி, விமலநாதன், செல்வநாதன் (லண்டன் - முன்னாள் ப.நோ.கூ.ச. உத்தியோகத்தர்), தனலெட்சுமி (லண்டன்), கமலநாதன் (அபிஸ்கோப்பி), கோணேஸ்வரநாதன் (கனடா), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதர விலாசினி, சிவபாதம், றோகினி (லண்டன்), புவனேஸ்வரி (லண்டன்), சபாநாதன் (லண்டன் - முன்னாள் கணக்காளர் - வ.பி.போ.ச.) கலாதேவி, கலாஜோதி (கனடா), சிவச்சந்திரன் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தக்ஷாயினி (லண்டன்), Dr.ஜெயக்குமார் (OXFORD - லண்டன்), செந்தூரன், ராகவேந்திரா (பரியோவான் கல்லூரி), தனுஷியா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இராஜேஸ்கண்ணா, நிருஜிதா, விஜிகிருஷ்ணா (பரியோவான் கல்லூரி), அபிசங்கர், ஜீவசங்கர் (பரியோவான் கல்லூரி), பிரியங்கா, அஞ்சனப்பிரசாதா (கனடா), அருண் மைந்தன் (கனடா), சோபி(லண்டன்), சேரன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவமணி, தனபாலசிங்கம் (சமாதான நீதிவான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி (பூரணம்), கமலாதேவி மற்றும் நாகரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2003) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகள் துண்டி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 16/12, விதானையார் வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (19200)

தகவல்:
மு.பத்மநாதன் (மகன்)
(றிக்கோ ஹோட்டல்)

## தென்மராட்சி அதிபர்களுக்கு

தென்மராட்சி,ஜூன்17

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10.00மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வும் சகல அதிபர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறும் வலயக் கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஒ-117)

## பல்கலை. இந்துமன்ற அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்.ஜூன்17

யாழ்.பல்கலைக்கழக இந்துமன்ற அலுவகத் திறப்பு விழா நாளை புதன் கிழமை நண்பகல் 12மணிக்கு மாணவர் பொது அறையில் அமைந்துள்ள அலுவகத்தில் நடைபெறவுள்ளது.

இந்துமன்றத் தலைவர் செள. சசிகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசியர் சு. மோகனதாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

## மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் விவரம் மீளாய்வு

தென்மராட்சி,ஜூன்17

தென்மராட்சி பிரதேசத்தில் பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர்களின் விவரங்கள் பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவினால் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தமது கொடுப்பனவு அட்டை, அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை ஆகியவற்றை தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(எ-117)

## பளைக் கல்விக்கோட்ட தமிழ்த்தினப்போட்டி

தென்மராட்சி,ஜூன்17

பளைக்கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தமிழ் மொழித்திறன் போட்டிகள் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் பளை மத்திய கல்லூரியில் நடைபெறுமெனக் கோட்டக் கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை அறிவித்துள்ளார்.

(எ-117)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஜூன்17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் சுற்றுப்போட்டி இன்றும் நாளை புதன்கிழமையும் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக உள்ள சமரபாகு நியூட்டன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் மோதவுள்ள கழகங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

★ இன்று மாலை 3.30மணிக்கு மனோகரா வி.க எதிர் பொமேஸ் வி.க.

4.30மணிக்கு கருணாகரன் வி.க. எதிர் ஆதிசக்தி வி.க.

★ நாளை புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கலட்டி வி.க. எதிர் பரு.ஜக்கிய வி.க.

4.30 மணிக்கு வல்வை வி.க. எதிர் சிவானந்தா வி.க. (ஒ-ரி)

# தலைமன்னார் பகுதியில் மிதிவெடியகற்றும் பணி

கிளிநொச்சி,ஜூன்17

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவும் சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனமும் இணைந்து தலைமன்னார் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

தலைமன்னார் பிரதேசத்தில் உள்ள பாலமடு, பாப்பா மோட்டை பகுதிகளைச் சூழவுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலேயே இப்பணி இடம்பெற்றுவருகின்றது.

மக்கள் இப்பகுதிகளில் மீளக் குடியமர வசதியாகவே இப்பணி மேற்கொள்ளப்படுகின்றது. நவீன கண்ணிவெடி அகற்றும் உபகரணமும் இதற்கெனப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மூன்று நாள்களில் மட்டும் 60 கண்ணிவெடிகள் இப்பகுதிகளில் அகற்றப்பட்டுள்ளதாக சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஒ-10-ரி)

## காணியும் கடைகளும் விற்பனைக்கு

இணுவில் மக்லியொட் வைத்தியசாலைக்குச் சொந்தமான இருகடைகளும், 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. இவை இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக இருக்கும் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடத்தப்படும் இருகடைகளும், அதற்குப் பின்புறமாக உள்ள 4 பரப்புக் காணியுமாகும்.

*தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-*

சொத்துப் பராமரிப்பாளர் (PROPERTY OFFICER)
ஆதீன காரியாலயம்,
தென்னிந்திய திருச்சபை, வட்டுக்கோட்டை.

(C28417)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



"பரமேஸ்வரிவாசம்"
வதிரி. கரவெட்டியைச் சேர்ந்தவரும்
முன்னாள் கமநலச்சேவை பெரும்பாக
உத்தியோகத்தரும். வதிரி. காளையந்தோட்டம்
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில்
பரிபாலனசபைத் தலைவரும்
வடமராட்சி தெற்கு. மேற்கு
ஓய்வு தியர் சங்கச் செயலாளருமாகிய

**உயர்திரு. வீரவாகு இராசையா**

அவர்கள் 16-06-2003 திங்கட்கிழமை யாழ். மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்களது முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். அவரது பணி மேன்மேலும் சிறக்க இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*வதிரி, கரவெட்டி.* (19204)

**மு.நரசிங்கம்** (சிறிய தகப்பன்)
**செ.தர்மலிங்கம் குடும்பம்** (கனடா-மைத்துனர்)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தின் 31ஆவது ஆண்டு விழாவையொட்டி 07 பேர் கொண்ட 12 ஓவர்களை உடைய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. இதற்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தர்ஷன் பேக்கறி,**
*புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்.*

**தருவயின்,**
*G.11, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**விண்ணப்பப் படிவம் 10/-**
**அனுமதிக்கட்டணம் 100/-**
**விண்ணப்ப முடிவு திகதி - 24.06.2003**

(19209)

நிர்வாகம்,
சனசமூகநிலையம்,
கொய்யாத்தோட்டம்.

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

**அன்புடையீர்,**

நிகழும் சுபானு வருஷம் ஆனித்திங்கள் 4 ஆம் நாள் (18.06.2003) புதன்கிழமை காலை 10.15 மணிமுதல் 11மணிக்குள் (பழைய நேரப்படி) வரையுள்ள கடகலக்கினமும் சித்தயோகமும் திருவோண நட்சத்திரமும் கூடும் சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**மகேந்திரகுமார்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**ஜெயந்தி**
அவர்களுக்கும்

நெடிய காட்டுப் பிள்ளையார் துணைகொண்டு மணமகன் இல்லத்தில் திருமணத்திருமாங்கல்ய தாரணம் செய்ய இறைவன் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி விஸ்வநாதபிள்ளை ராணிமலர்
அரசடி, நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி கணேசரத்தினம் பிறேமாவதி.
காவற்கோட்டை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு) (C28437)



கார் உற்பத்தித் தொழிலில் கொடிகட்டிப் பறந்த அமெரிக்கரான போர்டின் 100ஆவது பிறந்த நாளையொட்டி அமெரிக்காவின் மெச்சிகன் மாகாணத்தில் டியர்பான் என்ற நகரில் காட்சிக்கு வைக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய சக்கரங்களைக் கொண்ட வாகனம் இது.

# அமெ. படையினரின் தொடரணி மீது ஈராக்கில் கெரில்லாத் தாக்குதல்!


பக்தாத்,ஜூன்17

பக்தாத்தின் வடபகுதியில் இராணுவ நடவடிக்கையை முடித்து திரும்பிய அமெரிக்கப் படையினரின் வாகனத்தொடரணி மீது, ஈராக் கெரிலலாப் படையினர் நேற்றுத் திடீர்த் தாககுதல் நடத்தினர். இத்தாக்குதலில் அமெரிக்கப் படையினர் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் யாராவது உயிரிழந்தனரா? என்ற விவரம் வெளியிடப்படவில்லை. எத்தனை பேர் காயமடைந்தனர் என்பதும் தெரியவில்லை.

பக்தாத்திலிருந்து சுமார் 70 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பலாட் நகரில சதாமின் ஆதரவாளர்களைத் தேடும் நடவடிக்கைகளில் நேற்று முன்தினம் ஈடுபட்ட அமெரிக்கப் படையினர் திரும்பிய வாகனத் தொடரணியே தாக்குதலுக்கு இலக்கானது.

கட்டடம் ஒன்றில் ஒளிந்திருந்த கெரில்லாப் படையினர் அமெரிக்கப் படையினரின் வாகனத் தொடரணி அண்மித்ததும் திடீரென இருபதுக்கும மேற்பட்ட படையினரை ஏற்றிவந்த திறந்த லொறி ஒன்றை இலக்கு வைத்து ரொக்கட் தாக்குதல் நடத்தினர்.

குறிதவறாமல் வீழ்ந்த ரொக்கட்டால் லொறி தீப்பற்றி எரிந்தது.



பக்தாத்தில் வீதிச் சோதனை நடவடிக்கையில் அமெரிக்கப் படையினர்.

காயமடைந்த அமெரிக்கப் படையினர் உடனடியாக இராணுவ ஹெலிக்கொப்டர் மூலம் பக்தாத்திலுள்ள அமெரிக்கப் படையினரின் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இராணுவ நடவடிக்கையை முடித்துத் திரும்பிய அமெரிக்கப் படையினருக்கு இத்தாக்குதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திடீர் தாக்குதலை நடத்திவிட்டு மறையும் சதாம் ஆதரவு கெரில்லாப் படையினரின் நடவடிக்கைகளால் அமெரிக்கப் படையினர் கணிசமான அளவு இழப்பைச் சந்தித்து வருகின்றனர் என்பதையும், இதனால், அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையுமே இத்தாக்குதல் காட்டுவதாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

சுமார் 1300 அமெரிக்கப் படையினர் பங்குபற்றிய 'டெசேட் ஸ்கோப்பியன்'(Desert Scorpion) என்ற இராணுவ முற்றுகை எதுவித அசம்பாவிதங்களும் இன்றி முடிந்திருக்கின்றது.

முற்றுகை நடத்திய படையினர் ஈராக்கியர்களின் மனங்களில் இடம் பிடிக்கும் வகையில் சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களையும், பாடசாலை பொருள்களையும் வழங்கினர்.

அங்கு சுமர் 400 பேரை கைது செய்த படையினர் விசாரணைகளின் முடிவில் மூவரை மட்டும் பக்தாத்திற்கு அழைத்துச் சென்றனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஒ)

# மியான்மர் மீது அமெரிக்கா தடை

மியான்மரிலிருந்து அமெரிக்காவுக்கு பொருள்களை இறக்குமதி செய்வதைத் தடைசெய்யும் பிரேரணை அமெரிக்க நாடாளுமன்றில நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனநாயக உரிமைக்காகப் போராடும் நோபல் பரிசு பெற்ற ஆங்சாங் சூகியை கைதுசெய்து வீட்டுக்காவலில் வைத்துள்ளதைக் கண்டித்து மியான்மர் இராணுவ அரசுக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

மியான்மர் அரசுக்கு சொந்தமான அமெரிக்காவில் இருக்கும் சொத்துக்களும் முடக்கப்படவுள்ளன. (ஒ)

# முழுமையான உரிமைகளைப் பெறும்வரை போராடப் போவதாக ஹமாஸ் அறிவிப்பு

காஸா,ஜூன் 17

பலஸ்தீன மக்களின் அபிலாஷைகளை அமெரிக்காவின் சமாதானத் திட்டம் பிரதிபலிக்கவில்லை. இதனால், முழுமையான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும்வரை எமது போராட்டம் தொடரும் என்று ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது. ஆனால், அமெரிக்காவும், இஸ்ரேலும் ஹமாஸ் இயக்கத்தின் கருத்தைப் பொருட்படுத்தாது பலஸ்தீன நிர்வாகத்துடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றன.

இது குறித்து ஹமாஸ் இயக்கத் தலைவர் இஸ்மெயில் ஹனியா கூறுகையில், பலஸ்தீனர்களுக்குத் தம்மை பாதுகாத்துக்கொள்ள உரிமை உண்டு. பலஸ்தீனர்களின் உரிமைகளைப் பெற போராடி வரும் ஹமாஸ் இயக்கத்தைக் கட்டுப்படுத்த இஸ்ரேல் ஆக்கிரமிப்புத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. எமது முழுமையான உரிமைகளைப் பெறும் வரை ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிடுவோம்- என்றார்.

இதற்கிடையே, காஸாவின் வடபகுதியில் இருந்தும், மேற்குக்கரை நகரான பெத்தலேகேமில் இருந்தும் இஸ்ரேலியப் படைகளை வாபஸ் பெறுவது குறித்து நேற்று இரு தரப்புக்களும் பேச்சு நடத்தின.

இந்தப் பேச்சு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது என்று பேச்சுக்களில் கலந்துகொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க, பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ் அடிமாஸாவிடம் பகையுணர்வைக் கொண்டிருக்கும் ஹமாஸ் இயக்கத்தை சமாதானப்படுத்தி, பிரதமர் அப்பாஸின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் நோக்கில் எகிப்து பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று ஹமாஸ் இயக்கத்துடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

ஹமாஸ் இயக்கத்தைக் கண்டித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் பின்னணியில் இருந்து மத்திய கிழக்கு சமாதானத்திட்டத்தை பிரதமர் அப்பாஸ் முன்னெடுத்து வருவதற்கு ஹமாஸ் இயக்கம் எகிப்திய குழுவிடம் கண்டனம் தெரிவித்துள்ளது.



ஈரானின் பெரும் தலைவர் ஆயத்துல்லா கொமேனியுடன் (வலது) தஜிகிஸ்தான் அதிபர் நேற்று பேச்சு நடத்திய காட்சி.

# மெக்காவில் தாக்குதல்!

ரியாத்,ஜூன்16

சவூதி அரேபியாவில் உள்ள புனித நகரமான மெக்காவில் தீவிரவாதிகள நடத்திய தாக்குதலில் 10பேர் உயிரிழந்தனர். இதில் பாதுகாப்பு படை வீரர்கள் 5பேரும் பொதுமக்களில் 5பேரும் அடங்குவர். மேலும், இத்தாக்குதலில் 12பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்ததாக சவூதியிலிருந்து வெளிவரும் 'ஒகாஸ்' என்னும் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.


## பொங்கு தமிழுக்கு வாரீர் வந்து ஆதரவைத் தாரீர்!

அன்பான தமிழ் மக்களே!

கடந்த 25 ஆண்டு காலமாக எமது சொந்த மண்ணை ஆக்கிரமித்து இருக்கும் எதிரிகளுடனான ஒரு நியாயமான மண் மீட்பு போராட்டத்தினை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தி வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இப் போராட்டத்தில் தமிழர்கள் ஆகிய நாம் விலைமதிக்கமுடியாத உயிர்களையும் சொத்துக்களையும் இழந்து உள்ளோம். எனவே, தமிழர் ஆகிய நாம் எமது சுதந்திர உணர்ச்சியைக் காட்டும் முகமாக பொங்குதமிழ் நிகழ்வினைச் செய்து வருகின்றோம். எனவே, எதிர்வரும் (27.06.2003) அன்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில், யாழ்.பல்கலைகழக மாணவர்களால் நடத்தும் பொங்கு தமிழ்நிகழ்வுக்கு தமிழ் பேசும் அனைத்து மக்களும் உணர்ச்சிபூர்வமாக கலந்து தங்கள் பூரண ஆதரவை கொடுத்து உலகுக்கு எமது ஒற்றுமையையும், சுதந்திர வேட்கையையும் எடுத்து காட்ட வேண்டுகின்றோம்.

வணிகர்கழகம்,
காரைநகர்

(C28445)


# அமெரிக்காவின் அடுத்த இலக்கு ஈரான்?

வாஷிங்ரன்,ஜூன்17

ஈராக்கைத் தொடர்ந்து அமெரிக்காவின் அடுத்த இலக்கு ஈரானாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஆர்வம் காட்டி வருவதால் கவலை அடைந்துள்ள அமெரிக்கா, அடுத்த இலக்காக அந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

ஈரான் அரசு அணு ஆயுதங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பியோடிய அல்கெய்டா தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளித்து வருவதாகவும் அமெரிக்கா ஏற்கனவே குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈரான் மீது எந்த அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து ஈரான் விவகாரங்கள் தொடர்பான அமெரிக்க நடவடிக்கைக் குழு வரைவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. ஆனால், அதற்கு அதிபர் புஷ்ஷின் மூத்த ஆலோசகர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2006ஆம் ஆண்டுக்குள் ஈரான், அணு குண்டு தயாரித்துவிடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

ஈரான் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கும் திட்டம் ஏதும் இல்லை. அங்கு ஆட்சி மாற்றத்தையே ஏற்படுத்த புஷ விரும்புகிறார் என்றும் கூறப்படுகிறது.

அதாவது ஜனநாயக ஆதரவாளர்கள், மாணவர்கள், எதிர்க்கட்சியினர் ஆகியோரை ஒன்றுதிரட்டி தற்போதைய ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்து அங்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவே அமெரிக்கா விரும்புவதாகத் தெரிகிறது. (ஒ)


ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு.
K.S.ரவிக்குமாரின்
வரவு (ரீலஸ்)
சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

தேவை
(1) மில் வேலையில் அனுபவம் உள்ளவர்
(2) பழக விரும்புவர்
(3) உதவியாளர்
தொடர்பு:
பிருந்தா மில்ஸ்
N-18, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்
T.P.:- 5745 (19225)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்
விஜயகாந்த், சௌந்தர்யா, செந்தில், கவுண்டமணி நடித்த
சொக்கத்தங்கம் (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 5.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8:45 இற்கு
BEHIND ENEMY LINES

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய் மீராஜஸ்மின் கருணாஸ் நடித்த
புதிய கீதை (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே.)
(C28442)

லிபேட்டி அச்சுவேலி
இன்றுமட்டும்
அஜித், கிரண், மீனா, ரமேஷ்கண்ணா நடித்த
வில்லன் (ரீலஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00 (பு.நே.)
நாளை முதல்
ஸ்ருடன்ற் நம்பர் 1

லஷ்சுமி சினிமா இணுவில்
விஜய் சினேகா மற்றும் பலர் நடிப்பில்
வசீகரா (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)


## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி சபாநாயகம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பராசக்தி சபாநாயகம் 16.06.2003 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் கலாபூஷணம் சபாநாயகம்(ஓவியர்) அவர்களின் அன்பு மனைவியும் கலையரசன்(கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், தெல்லிப்பழை), ஜெகநேசன்(பொறியியலாளர்,லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மைதிலி, குணவதி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கலைப்பிரியா, பவித்திரா (மாணவிகள் யாழ்/யூனியன் கல்லூரி), சோபிகா, அருண்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற கனகாம்பிகை சீவரத்தினம், கதிர்காமலிங்கம் (J.P.மல்லாகம்), காலஞ்சென்ற சோதிமதி, கனகலிங்கம்(ஆஸ்திரேலியா), மனோன்மணி, தில்லைநாதன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.06.2003) திங்கட்கிழமை மாலை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மில் ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
கலாபூஷணம் ச.சபாநாயகம்
(கணவர்)

(19224)

# பாஷையூரில் இரு நாள்களாக இரு குழுக்களிடையே மோதல்

## சிலர் காயமடைந்தனர்; பதற்றம் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஜூன்17

பாஷையூர் பகுதியில் கடந்த இரு நாள்களாக இரு குழுக்களிடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. பாஷையூர் மீனவர்கள் எவரும் நேற்றுத் தொழிலுக்குச் செல்லவில்லை. மோதல்களில் சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாஷையூர் அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு ஆலய முன்றிலில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின்போதே இம்மோதல் உருவானதாகக் கூறப்பட்டது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இசை நிகழ்ச்சி இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம், ஒரு பிரதேச இளைஞர்கள் சிலர் பொது மக்களின் மத்தியில் நடனமாட முற்பட்டதாகவும் அதனை மற்றைய பகுதி இளைஞர்கள் சிலர் தடுக்க முற்பட்டபோது வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பாகியது. குருநகரைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் தாக்கப்பட்டு துரத்தப்பட்டனர். அவர்கள் மீண்டும பெரும் எண்ணிக்கையானவர்களைத் திரட்டிக் கொண்டு அவ்விடத்திற்குச் சென்று மோதலில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன்போது இரு பகுதியினரும் கற்கள், பொல்லுகள், போத்தல்கள் மற்றும் வாள் போன்றவற்றைப் பயன்படுத்தி தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கோஷ்டி மோதலில் அப்பகுதியிலுள்ள சில கடைகள் மற்றும் வீடுகளின் கண்ணாடிகளும் சேதப்படுத்தப்பட்டன.

சிலமணி நேரத்தின் பின்னர் பொலீஸார் சம்பவ இடத்திற்கு வந்தபோதிலும் நிலைமையை பூரணகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இம் மோதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞர்கள் சிலரை யாழ். பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த குருநகரைச் சேர்ந்த ஆ.ஜெயருபன் (வயது 24), சொ.ஹயஸ்மன் (வயது 26) ஆகியோர் மார்பு மற்றும் தலைப்பகுதியில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதல் இடம்பெற்ற அப்பகுதி வீதியெங்கும் போத்தல் ஓடுகளும், கற்களும் சிதறிக்கிடக்கக் காணப்பட்டன.

மோதல் நேற்றுப் பிற்பகல்வரை ஆங்காங்கு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால், பாஷையூர், ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் மற்றும் குருநகர் பகுதிகளில் பெரும் பதற்றமான சூழல் நிலவியது.

இக்கோஷ்டி மோதல் மீனவர்கள் தொழில்செய்யும் குடாக்கடலிலும் தொடரலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதனால், பாஷையூர் கடற்படையினர் நேற்றுப் பகல் குடாக்கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனவும் கூறப்பட்டது.

கடந்த நாள்களில் ஊர் மக்களிடையே இடம்பெறும் மோதல் சம்பவங்களின் தொடர்ச்சி, அவர்கள் தொழில் செய்யும் கடலிலும் கூட இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

(ம-9-15-17-30-88-139-51)

# தமிழக மீனவர்கள் 18பேரை இலங்கை மீனவர் சிறைபிடிப்பு

## அடித்துக் கடத்தி வந்தார்களாம்

சென்னை,ஜூன்17

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 18மீனவர்களை இலங்கை மீனவர்கள் அடித்து, கடத்திச்சென்றுள்ளனர் என்று தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன, கடத்திச் சென்றவர்களிடமிருந்து இரண்டு மீனவர்கள் தப்பி வந்துவிட்டனர் என்றும் கடத்திச் செல்லப்பட்ட மீனவர்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ராமேஸ்வரத்திலிருந்து கடந்த சனிக்கிழமை காலை வழக்கம்போல மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.இந்தியக் கடல் பகுதியில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை மீனவர்கள் அங்கு வந்து ராமேஸ்வரம் மீனவர்களைத் தாக்கினர்.

திடீர் தாக்குதலில் நிலைகுலைந்த தமிழக மீனவர்கள் அவர்களிடமிருந்து தப்ப முயன்றனர். ஆனால், இலங்கை மீனவர்களின் பயங்கரத் தாக்குதலில் ராஜு, டெனில், சுந்தரராஜன், ஜனகன் ஆகிய தமிழக மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

இவர்களில் டெனில் மற்றும் சுந்தரராஜன் இருவரும் ஒரு படகில் தப்பி வந்துவிட்டனர். ஏனைய 18பேரும் மாட்டிக்கொண்டனர். அவர்கள் இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று டெனிலும், சுந்தர ராஜனும் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கடற்படை அதிகாரிகள், இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கும் தமிழக பொலீஸாருக்கும் தகவல்கொடுத்துள்ளனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை செய்ய அனுமதிக்க முடியும் என்று பெண் போராளிகள் படையினரிடம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் அதுபற்றி அயலில் உள்ள பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினர். அங்கிருந்த புலிகள் உறுப்பினர்கள் உடன் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். வேகமாகச் சென்ற அவர்களை சுழிபுரம் சந்தியில் வழிமறித்த படையினர் முகாம் அமைந்திருந்த இடத்துக்கு அவர்கள் செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் படையினருடன் புலிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. சிறிது நேரத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற போராளிகள் முகாமுக்கு சென்று சேர்ந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ். நகரிலுள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. கண்காணிப்புக் குழு அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் போராளிகளுடன் கலந்துரையாடியதை அடுத்து, பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கண்காணிப்புக் குழு அதிகாரியுடன் சேர்ந்து முகாமினுள் சோதனை நடத்த புலிகள் அனுமதித்தனர்.

அங்கு ஆயுதங்களோ, நவீன தொலைத்தொடர்பு கருவியோ இருக்கவில்லை எனத் தேடுதலின் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, விடுதலைப் புலிகளின் பாவனையிலுள்ள, அந்த முகாமுக்கு முன் புறத்தில் பூட்டிய நிலையிலுள்ள வீட்டை சோதனை செய்ய வேண்டும் எனப் படையினர் தெரிவித்தனர். அந்த வீட்டின் திறப்பு யாழ்ப்பாணத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால், மாலையில் அந்த வீட்டைச் சோதனையிடப் படையினர் இணக்கம் தெரிவித்தனர்.

பின்னர் கண்காணிப்புக் குழு அதிகாரியும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் நேற்று மாலை அந்த வீட்டைச் சோதனை செய்தனர். அங்கும் ஆயுதமோ, தொலைத்தொடர்பு கருவிகளோ இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

"படையினரின் அணுகுமுறை எம்மைச் சீண்டும் செயலாக அமைந்துள்ளது. எம்மை அவமானப்படுத்தும், ஆத்திரமூட்டும் செயலாகவும் அவை அமைந்துள்ளன" என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(ம-3)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
மாதவன் நடித்த
நள தமயந்தி
(பிரதிகள் உடன்பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(10222)

புதிய வீடியோ CD
வெளியீடு
மாதவன் நடித்த
நள தமயந்தி
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்
(C/28446)

## சோதனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆயுதம் இன்றியே அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலீஸாரை விடுவிக்கவேண்டுமானால் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ள எமது போராளியான சத்தியநாதன் விடுதலை செய்யப்படவேண்டும்.

மட்டுநகரில் வீதிச் சோதனைச் சாவடிகளை அமைப்பது மக்களை பீதி கொள்ளச் செய்யும்; சமாதானத்தின் மீதுள்ள நம்பிக்கையையும இழக்கச் செய்யும். ஆகவே, அவற்றை அமைப்பது சரியல்ல எனப் புலிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அரச தரப்பினர் ஏற்றுக்கொண்டனர். நேற்றைய பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்றன.

## பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் இவ் விஜயத்தில் இணைந்து கொள்வார். பிரதமர் லண்டனுக்கு விஜயம் செய்வதற்கு முதல்நாள் அமைச்சர் மிலிந்த மொறகொட லண்டனுக்குச் செல்வார்.

## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் 179பேரும், மன்னார் மாவட்டத்தில் 75பேரும், வவுனியா மாவட்டத்தில் 65பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 76பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 112பேரும், அம்பாறை மாவட்டத்தில் 152பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

நியமனம் பெறும் ஆசிரியர்கள் அனைவரும் நாளைமறுதினம் வியாழக் கிழமை தமக்குரிய பாடசாலைகளில கடமையைப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் -

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் - மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிரந்தர நியமனம் பெறும் ஆசிரியர்களின் பெயர், பாடசாலை விவரம் 3ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

(எ)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது புரிந்துணர்வு ஒப்பந்தச் ஏற்பாட்டை மீறிய செயலாகும் எனத் தூதரக வட்டாரங்கள் கருதுகின்றன என்று அந்தச் செய்தி தெரிவித்தது.

இக்கப்பல் தொடர்பாக எடுக்கப் படவேண்டிய நடவடிக்கை குறித்து கடற்படை, ஜனாதிபதியின் ஆலோசனையைக் கோரியது என்பதை ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆனால், கப்பல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முன், கண்காணிப்புக் குழுவுடன் கடற்படை தொடர்பு கொண்டதாகத் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

இக்கப்பல் அழிந்த அல்லது அழிக்கப்பட்ட பின்னரே அது குறித்து கண்காணிப்புக்குழுவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

# இலங்கை – இந்திய கடற்படைகள் பாக்குநீரிணையில் தீவிர ரோந்து

பாக்கு நீரிணைக்கடற்பரப்பில் இந்திய - இலங்கை கடற்படையினர் கூட்டாக இணைந்து தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை கிழக்குக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இரு நாட்டு கடற்படையினரும் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்பில் நடமாடும் கப்பல்கள் தொடர்பாக ஏற்கனவே கண்காணிப்பில் ஈடுபட்டு வந்த இந்தியக் கடற்படையினர் தற்பொழுது இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து தமது கண்காணிப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

(ம-4)

# வடமராட்சியில் புதிதாக படைமுகாம்,காவலரண்கள்

வடமராட்சி,ஜூன்17

வடமராட்சியில் புதிதாக இராணுவ முகாம் மற்றும் காவலரண்களை அமைக்கும் பணியில் நேற்று இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

கரவெட்டி பிரதேச செயலகம், மாலுசந்தி ஆகிய இடங்களில் புதிய காவலரண்கள் நேற்று பிற்பகலில் படையினரால் அமைக்கப்பட்டன.

பருத்தித்துறை-கொடிகாமம் வீதியில் துன்னாலை கிழக்கில் புதிய முகாம் ஒன்றை அமைக்கும் பணியிலும் படையினர் நேற்று ஈடுபட்டிருந்தனர். வல்லிபுரம் அத்தியடி ஆகிய பகுதிகளில் நேற்று சோதனை நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டனர்.

(ம-70-173)

## யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய

# அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி நாடாளுமன்றில் நாளை கூட்டம்

கொழும்பு,ஜூன்17

யாழ்மாவட்டத்துக்கு வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட நிதிமூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் நாளை புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரச அதிபர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

(ம-8)

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்17

உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய மாணவியின் மர்மக் கொலை தொடர்பாக ஏற்கனவே பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள தில்லையம்பலம் ரமணனைத் தொடர்ந்தும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

(ம-8)

## விசாரணை

கடந்த 10ஆம் திகதி திக்கம் பகுதியில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட இன்பருட்டியில் வசிக்கும் குடும்பஸ்தரின் குடும்பம் படையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

காணாமற்போனவரின் மனைவி, பிள்ளைகளையும் அவரது அயலவர் ஒருவரையும் நேற்றுமுன்தினம் காலை 10மணியளவில் முகாமுக்கு அழைத்துச்சென்ற படையினர் அவர்களிடம் விசாரணைகளை நடத்தினர். பிற்பகல் 2.00மணிவரையில் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இன்பருட்டியில் அவர்கள் வசிக்கும் வீடு தற்போது இரவு பகலாக படையினரின் தீவிர கண்காணிப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-173)

## வடக்கு - கிழக்குக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு விஜயம் செய்து அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி பயன்படுத்தப்படுவதைப் பார்வையிடவுள்ளனர். இதன் காரணமாக கிடைத்த நிதியை அவசரமாகப் பயன்படுத்த வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டோக்கியோ மாநாட்டில் தெரிவித்தபடி தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு (Provisional Administrative Structure) தொடர்பாக அரசாங்கத்தின் விளக்கங்கள் அடங்கிய கடிதம் புலிகளுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் முழுப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்யக் கிடைத்த நிதியைப் பயன்படுத்தும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

டோக்கியோ நிதி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கைச் சரித்திரத்தில் முன்னெப்போதும் கிடைக்காத அளவுக்கு நிதி கிடைத்துள்ளது. 45 ஆயிரம் கோடி ரூபா இலங்கைக்கு நிதியுதவியாகக் கிடைத்துள்ளது. இது குறித்து பல விமர்சனங்கள் எதிர்க் கட்சிகளிடமிருந்து எழுந்துள்ளன. விமர்சனங்களை அரசு வரவேற்கின்றது.

"இலங்கை மக்கள் கடன் சுமை தாங்க மாட்டார்கள். நிதியுதவி கடன்தான். அதை திருப்பிச் செலுத்த வேண்டும்" என்றெல்லாம் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இலங்கைக்கு கிடைத்த நிதியுதவி அனைத்தும் கடன் அல்ல. குறிப்பாக ஐரோப்பிய யூனியன் வழங்கிய நிதி முழுவதும் நன்கொடை.

ஏனைய நாடுகள் நன்கொடைகளோடு குறைந்த வட்டி அடிப்படையில் 30 முதல் 40 ஆண்டுகளில் திருப்பச் செலுத்தக்கூடியவகையில் - இலகு கடன் தொகைகளை வழங்கியுள்ளன.

விமர்சிப்பவர்கள் இலங்கைக்கு நிதியுதவி கிடைக்காவிட்டால் இலங்கையை சர்வதேச நாடுகள் நம்பவில்லை என்பார்கள். கிடைத்தால் கடன் சுமை கூடிவிட்டது என்பார்கள். யதார்த்தத்தை உணர்ந்து விமர்சிக்க வேண்டும் - என்றும் அமைச்சர் கூறினார்.

இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (19201)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.